# தமிழரசு

16.10.1994 ரூ.3





பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்.....


மதுரையில் நடந்த புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-3 நூல் வெளியீட்டு விழா ........ 4

வளரும் வேளாண்மை ........ 9

நாகை-காயிதேமில்லத் மாவட்ட அரசு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ........ 10

குற்றாலத்தில் குதூகலமான சாரல் விழா ........ 23

திண்டுக்கல்-அண்ணா மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ........ 24

திருப்பதி திருமலை தங்கத் தேரோட்டம் ........ 33

நலிந்தோர் நலம் பெற ........ 35

ஔவையார் ........ 38

நல்ல தமிழ்ச் சொற்கள் ........ 43



தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2025

புரட்டாசித் திங்கள்: 30

இதழ்:8

மலர்:25

16.10.1994


## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

*கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை (9)*

★ கேட்காத செவி பார்க்காத கண முதலியனபோல், எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம்.



# அண்ணாவின் எழுத்தோவியங்கள் அரசுடைமை!

"அண்ணாவின் அரசியல் சிந்தனைக் களஞ்சியங்களும், செந்தமிழுக்கு அவர் ஆற்றிய அரும்பணிகளும் இனி அரசு உடைமை ஆகும்.

அவருடைய படைப்புகள் அனைத்தையும் இனி, யார் வேண்டுமானாலும் அச்சிட்டு வெளியிடலாம். அதன்மூலம் அவரது உலகளாவிய கொள்கைகளும், திராவிட இயக்க இலட்சியங்களும் தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் - ஏன், உலகம் முழுவதும் பரவும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, எனக்குள் ஒரு ஆனந்தப் பூரிப்பு ஏற்படுகின்றது.

அண்ணாவின் எழுத்தோவியங்கள் அரசு உடைமை ஆக்கப்படுவதால், அதற்குரிய மதிப்பு விரைவில் நிர்ணயிக்கப்பட்டு அவரது குடும்பத்திற்கு அந்த மதிப்புத் தொகை வழங்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

–மாண்புமிகு முதலமைச்சர்
(நாகை - 15.9.1994)

# உலகத் தமிழ் மாநாடு

## தஞ்சையில் முதலமைச்சர் ஆய்வுக் கூட்டம்– மாண்புமிகு அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னையிலிருந்து 14.9.1994 அன்று, ஹெலிகாப்டர் விமானம் மூலம் தஞ்சை வந்தடைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைத் தஞ்சாவூர், மாவட்ட ஆட்சித்தலைவர், திரு. ஈ. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்களும், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் காவல்துறை அதிகாரிகளும், பொதுமக்களும் வரவேற்றார்கள்.

அரசினர் விருந்தினர் மாளிகை வந்தடைந்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 1995-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தஞ்சையில் நடைபெற உள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடத்துவதற்கான ஆயத்தப் பணிகள் குறித்து, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், திரு எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், திரு. எஸ். கண்ணப்பன், தலைமைச் செயலாளர், திரு.என். அரிபாஸ்கர், காவல்துறை இயக்குநர் திரு ஸ்ரீபால் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு. ஈ. வெங்கடாசலம், ஆகியோரை அழைத்து ஆய்வுக் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

உலகத் தமிழ் மாநாடு சிறப்பாக நடைபெற மேற்கொள்ளுவதற்கான கட்டுமானப் பணிகளுக்காகவும், மாநாடு நடைபெறுவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் போன்றவற்றிற்காகவும் இதுவரை சுமார் 60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக, மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளின் நிலைகளை, மாவட்ட ஆட்சித்தலைவர், வரைபடங்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் விளக்கமாக எடுத்துரைத்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு பணிகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து, அவ்வப்போது அந்தப் பணிகளை மேலும் சிறப்பாக மேற்கொள்ளத்தக்க தமது மேலான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார். புதிதாக மேற்கொள்ளவேண்டிய பணிகள் பல குறித்தும் தனது கருத்துக்களைத் தெரிவித்தார். கலை நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவது குறித்த புதிய யோசனைகளையும், ஆலோசனைகளையும் வழங்கினார். கட்டுமானப் பணிகள், பாதுகாப்புப் பணிகள், கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்கு நிகழ்ச்சிகள், ஊர்வலம் போன்றவற்றிற்கான எல்லா ஆயத்தப் பணிகளையும் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 15-ஆம் தேதிக்குள் முடித்துவிட வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தஞ்சையில் இந்த ஆய்வுக் கூட்டம் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

## பாரம் குறையுமா?

நமது மக்கள் தொகை 1951-லிருந்து 1991 வரையிலான நாற்பது ஆண்டுகளில் சுமார் 2¼ மடங்கு பெருகியுள்ளது. 1957-இல் 36.11 கோடியாக இருந்தது. 1991-இல் 84.63 கோடியாக அதிகரித்து விட்டது.

திருப்தி தரும் செய்தி என்னவெனில், மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் படிப்படியாகக் குறைந்து வருகிறது. 1941-51 காலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1.25 சதவிகிதமாக இருந்தது. 1971-81-இல் இது 2.22 சதவிகிதமாக அதிகரித்தது. எனினும், 1981-91 காலகட்டத்தில் இது 0.8 சதவிகிதமாகக் குறைந்து, 2.14 சதவிகிதமாகியது. 1992-இல் இது மேலும் சரிந்து 1.90 சதவிகிதமாக ஆகியுள்ளது.

பிறப்பு விகிதம் குறைந்துள்ளது. எனினும், குறைந்துவரும் இறப்பு விகிதத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் அல்ல. 1992-இல் இறப்பு விகிதம் 10 சதவிகிதமாகவும், பிறப்பு விகிதம் 29 சதவிகிதமாகவும் இருந்தது. சராசரி ஆயுள் காலம் 1941-51-இல் 32 ஆண்டுகளாக இருந்தது. 1986-91-இல் 58.6 ஆண்டுகளாக அதிகரித்துள்ளது.

வரும் 2001-வது ஆண்டில் நமது மக்கள் தொகை நூறு கோடியைத் தாண்டக்கூடும். பூமி தாங்குமா? பாரம் குறையுமா?



## 8-வது உலகத் தமிழ் மாநாடு:

**மாண்புமிகு முதல்வர் நேரில் அழைப்பு; குடியரசுத் தலைவர், பிரதமர் ஒப்புதல்**

தஞ்சாவூரில், வருகிற ஜனவரி மாதம் சிறப்புற நடைபெறவிருக்கும் **8-வது** உலகத் தமிழ் மாநாட்டிற்கு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களும் வருகை தரவிருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இதற்காக நேரில் அவர்களைச் சந்தித்து அழைப்பு விடுப்பதற்காக டில்லிக்குச் சென்றிருந்தார்.

**3.10.94** அன்று மதியம் ஒரு மணியளவில் மேதகு குடியரசுத் தலைவர் திரு. சங்கர்தயாள் சர்மா அவர்களை ராட்டிரபதி பவனில் சந்தித்து அழைப்பு விடுத்தார் மாண்புமிகு முதலமைச்சர். ஏறத்தாழ **30** நிமிடம் இந்தச் சந்திப்பு நடந்தது. அன்று மாலை **4.30** மணியளவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களையும் அவரது இல்லத்தில் சந்தித்து அழைப்பு விடுத்தார்; இந்தச் சந்திப்பும் ஏறத்தாழ **30** நிமிட நேரம் நடந்தது.

அவர்கள் இருவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அன்பழைப்பை ஏற்றுக் கொண்டார்கள். ஜனவரி முதல் தேதியிலிருந்து **5**-ஆம் தேதிவரை தஞ்சாவூரில் நடைபெற உள்ள **8**-வது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள ஒப்புதல் அளித்தார்கள்.



அட்டை சொல்லும் கட்டுரை

## அறிவுச்சுரங்கம் - ஆராய்ச்சிக் கதிர்மணி - கருத்துப்பெட்டகம் - பல்கலைப் பனுவல்

# புரட்சித்தலைவி முழக்கம் தொகுதி-3 நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் பெருமக்கள் பெருமிதம்

கூடல் நகராம் மதுரையில், மாசிவீதிகள் கூடும் சந்திப்பில்,தமிழகத்தின் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அன்னவரோடும், சட்டப் பேரவைத்தலைவரும் பங்கேற்க, மதுரை மாநகர் இதுவரை கண்டறியா வகையில் அரசு விழா ஒன்று அக்டோபர்த் திங்கள் 5-ஆம் நாள் அரங்கேறியது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கடந்த ஆண்டில் ஆற்றிய தமிழ் உரைகளின் தொகுப்பு "புரட்சித் தலைவி முழக்கம்-3" ஆங்கில உரைத் தொகுப்பு



"Jayalalitha Speaks Vol.III" ஆகிய எழில்மிகு நூல்களின் வெளியீட்டு விழா தான் இச் சிறப்பு மிகு விழா!

"சமூகநீதி காத்த வீராங்கனை" என்னும் தலைப்பில் அறுபெருங் கவிஞர்கள், பாலாறும் தேனாறும் பாய்வது போல, கவி மழை பெய்து விழாவைத் தொடக்கி வைத்தார்கள். கவிஞர் புலமைப்பித்தன் கவியரங்கைத் தொடங்கி வைத்தார். உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில், கவிஞர் கரு. நாகராசன், கவிஞர் முத்துலிங்கம், கவிஞர் அரு. நாகப்பன், கவிஞர் இளந்தேவன் ஆகியோர் தாங்கள் யாத்த கவிதையை மன்றத்தின் முன்வைத்து மக்களை மகிழ்ச்சி மழையில் நனைய வைத்தனர்.

பின்னர் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்களது தலைமையில் நூல் வெளியீட்டு விழா சிறப்புக்கூட்டம் நடைபெற்றது.

### மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் வரவேற்புரை

'புரட்சித்தலைவியின் முழக்கம்' நூல் வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்தோரை வரவேற்று, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் எளிமைக்கு எளிமையாய், இனிமைக்கு இனிமையாய், ஓரிரு சொல் எடுத்து உவமைக்கு நயம் கொடுத்து வரவேற்புரை



ஆற்றினார்.

அடுத்து மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "புரட்சித்தலைவி முழக்கம் தொகுதி-3", "Jayalalitha Speaks - Vol III" ஆகிய இரு நூல்களையும் வெளியிட்டார்.

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் நூலின் முதற் பிரதிகளைப் பெற்றுக்கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரைகளின் திறம் குறித்தும், தொகுக்கப்பட்ட நூலின் நயம் குறித்தும் புகழ்ந்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அ.மா. பரமசிவன் அவர்கள், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு. வி. சத்திய மூர்த்தி அவர்கள், மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி அவர்கள், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள், மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்டி சோமசுந்தரம் அவர்கள், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.



**மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அ.மா. பரமசிவன் அவர்கள் பேசியதாவது:**

"தமிழகத்தின் தன்னேரில்லாத முதலமைச்சர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு புரட்சித்தலைவியின் முழக்கம் என்னும் பெயரில் அழகிய நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இந்த நூல் எப்பேர்ப்பட்ட நூல்; எத்தகைய அருமையான கருத்துக் களைத் தாங்கியிருக்கிறது; எவ் வளவு சிறப்பான கருத்துக்களை எடுத்துக்காட்டிக் கொண்டிருக் கிறது என்பதையெல்லாம் கவி ஞர்கள் மிகவும் சிறப்பாக எடுத் துப் பேசினார்கள். இத்தகைய ஆற்றல் மிக்க உரைகளை ஆற்றிய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், சாதி, மத, கட்சி பேதமின்றி மக்கள் சக்தியைத் திரட்டிக் காட்டுகின்ற மாபெரும் சக்தி ஆவார். அந்த மாபெரும் சக்திதான் 69 சதவிகித இட ஒதுக் கீட்டை நமக்குப் பெற்றுத் தந்தது. தான் சொன்னதைச் செய்து காட்டுகிற, கொடுத்த வாக்குறு தியை நிறைவேற்றிக்காட்டுகிற ஒரே முதலமைச்சர் இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒரே ஒருவர்தான். அவர்தான் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

அரசு சாதனைகளை மாண வர்கள் ஆராய்ச்சி செய்திட உறு துணை புரியும். இந்நூல் எளி தாகக் கிடைக்க, எல்லோருக்கும் கிடைக்க, செய்தித்துறை அனைத்து ஏற்பாடுகளும் செய்திட வேண்டும்".

**மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. இந்திரகுமாரி அவர்கள், பேசியதாவது:**

இந்தப் புத்தகம் ஒரு சாதாரணப் புத்தகம் அல்ல; இந்தியாவுக்கே வழிகாட்டுகிற ஒரு சரித்திரப் புத்தகம். இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி ஒரு சாதாரண மனிதர் அல்ல; அவர் ஒரு சகாப் தம். அவர்கள் வாழுகிற காலத்தில் வாழ்வதே நமக்குப் பொற்காலம்.

இளைய தலைமுறைக்கும் எதிர் காலத் தலைமுறைக்கும் எப்படிப் பட்ட ஒரு முதல்வர் தமிழ்நாட்டை ஆட்சி செய்திருக்கிறார் என்பதை- எப்படிப்பட்ட அறிவாற்றல் மிக்க ஒரு தலைவர் அவர் என்பதை எடுத்துக்காட்டுகிற சாட்சியாக இந்த நூல் அமைந்திருக்கிறது.



புரட்சித்தலைவியின் முழக்கம் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய அற்புத நூல். அண்ணா தி.மு.க. தொண்டன் ஒவ்வொரு வர் இல்லத்திலும் இருக்கவேண் டிய அற்புத நூல். அண்ணா தி.மு.க. தொண்டன் ஒவ்வொரு வரின் உயிர் நாடி உயிர் மூச்சு டாக்டர் புரட்சித்தலைவி. அவருக் காக எங்கள் உயிரையும் கொடுக்கத் தயங்கமாட்டோம். அவரது உரைகளைத் தொகுத்து நூலாகச் சிறப்பாக வெளியிட்டி ருக்கும் செய்தித்துறைக்கு எனது அன்பான பாராட்டுக்களை உரித் தாக்குகிறேன்.

**மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வி. சத்தியமூர்த்தி அவர்கள் பேசியதாவது:**

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிய உரை களின் தொகுப்பான புரட்சித்



தலைவியின் முழக்கம் என்னும் இந்த நூலைப் படித்தால், அரசின் நிர்வாகம் என்பது என்ன? அதன் திட்டங்களும் செயல்பாடும் எப்படி? ஏழை எளிய மக்களை வாழ வைக்கும் நலத்திட்ட உதவிகள் என்னென்ன என்கிற விளக்கங் களையெல்லாம் நாம் அறிந்து கொள்ள முடியும். நம்மை ஆட்சி யில் அமரவைத்தவர்களுக்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்திருக்கும் சாதனைகளை நாம் தெரிந்து கொள்ள முடியும். தமிழகத்திற்கு இது ஒரு பொற்காலம் என்பது வெறும் வாய்ச்சொல் அல்ல. அது ஒரு சரித்திரம். இந்தச் சரித் திரத்தை யாரும் புரட்டி எழுத முடியாது. இந்தப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தாலே அது புரிந்து விடும்.

புரட்சித்தலைவியின் முழக்கம் என்னும் இந்த நூல், இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சி சிறக்கும் வகை யில், அதன் திட்டங்கள், கொள்கை வடிவங்களைச் சிறப்புடன் விளக் கும் வகையில் அமைந்துள்ளது.



**மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி அவர்கள் பேசியதாவது:**

சங்கம் வளர்த்த மதுரையிலே இன்று எழுகின்ற வீர முழக்கம் அதுவே "புரட்சித்தலைவியின் முழக்கம்". இது வெறும் பேச்சுக்களின் தொகுப்பு அல்ல; புரட்சித் தலைவி அவர்கள் படைத்திருக்கும் புதிய புறநானூற்று!

இந்தியத் திருநாட்டைக் காக்க என்று வருவார் இந்தத் தலைவர் என்ற எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது "புரட்சித்தலைவியின் முழக்கம்". கருத்துப் பெட்டகமான இந்நூல், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு பொறுப்பேற்று என்ன சாதித்தது என்பதை எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது. புரட்சித்தலைவி அவர்கள் மாவட்டந்தோறும் சென்று நடத்திய விழா– அதன்மூலம், மக்களுக்குச் செய்த சாதனைகள்–இன்னும் செய்யப்போகும் சாதனைகள் ஒவ்வொரு பிரச்சினை மீதும் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் இவை யாவற்றையும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது இந்த நூல்.

**மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் பேசியதாவது:**

வரலாற்றை உருவாக்குகின்ற தலைவர்களுள் முதல் தலைவராக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார். அவர் பேசியுள்ள பேச்சுக்கள், மக்கள் மத்தியில் ஆற்றியுள்ள உரைகள் அவை வெறும் வார்த்தை ஜாலமில்லை; அத்தனையும் நாம் கவனிக்க வேண்டிய கருத்து; கற்க வேண்டிய பாடம்.

"புரட்சித்தலைவியின் முழக்கம்" என்னும் இந்த நூல் கருத்துப் பெட்டகம்; தத்துவ ஊற்று; பல்கலைப் பனுவல்; ஆராய்ச்சிக் கதிர்



மணி; அறிவுச் சுரங்கம்; வருங்காலத் தமிழகம் வளம்பெறவே வைக்கப்பட்டுள்ள வைப்பு நிதி; மொத்த இந்தியாவுக்கும் அளிக்கப்பட்டுள்ள சீதனம். அதுவே இந்நூல்!

**மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர். திரு. இ. மதுசூதனன் அவர்கள் பேசியதாவது:**



"புரட்சித்தலைவியின் முழக்கம்" என்பது வெறும் புத்தகம் அல்ல; வருங்கால சந்ததிகளுக்கு வரலாற்றைச் சொல்லப்போகும் சத்தியம்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றியுள்ள இந்த உரைகளுக்குப் பின்னால் சத்தியம் இருக்கிறது; நீதி இருக்கிறது; மாணவர்களும், பாட்டாளிகளும், மக்களும் எப்படி இருக்க வேண்டும் என்கிற தத்துவம் இருக்கிறது. இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடம் பெறவேண்டும் என்று செயல்படுகின்ற தொலைநோக்குத் திட்டங்கள் இருக்கின்றன.

இத்தகைய அரிய நூலை வெளியிட்ட செய்தித்துறை இன்னொன்றும் செய்திட வேண்டும். இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி ஆற்றியுள்ள உரைகளை ஒலி நாடா வடிவமாக்கிப் பட்டி தொட்டி எங்கும் கேட்கும்படி செய்திட வேண்டும். வருங்காலச் சமுதாயம் வணங்கி வரவேற்கும்.



**மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசியதாவது:**

தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு நூலாம், "புரட்சித்தலைவியின் முழக்கம்", நூலை, தமிழ் வளர்த்த மாமதுரையில் நின்று வெளியிடுகிறோம். இந்துக்களுக்கு எப்படி கீதையோ, கிறிஸ்துவர்களுக்கு எப்படி பைபிளோ, இஸ்லாமி

யருக்கு எப்படி குரானோ, அதே போல அண்ணா தி.மு.க. தொண்டன் ஒவ்வொருவர் இல்லத்திலும் "புரட்சித்தலைவியின் முழக்கம்" இருக்கும்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கென, 69 சதவிகித இட ஒதுக்கீடு, உலக வரலாற்றிலேயே எங்கும் இல்லை. டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பேசிக் கொண்டிருந்த ஒரு தலைவரை பேசாமல் இருக்க வைத்தார். பேசாமலிருந்த ஒரு தலைவரைப் பேச வைத்தார். ஆன்மீகவாதிகள் அவரைப் போற்றுகின்றார்கள். திராவிட வழிவந்தவர் அவரைப் பாராட்டுகின்றனர். பாரதப் பிரதமர் அவரைப் பாராட்டுகிறார்; குடியரசுத் தலைவர் அவரைப் பாராட்டுகிறார்; அன்னை தெரசா அவரைப் பாராட்டுகிறார். உலகமே டாக்டர் புரட்சித்தலைவி அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. இப்படிப் பாராட்டுப் பெறுவதற்குரிய மனிதநேயம், ஏழை எளியவர்களுக்காய் செயல்படுத்தும் திட்டங்கள், அள்ளி வழங்கும் உதவிகள் அனைத்தும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரையில் நிரூபணமாய் இருக்கின்றன. இதனால்தான் அனைவரும் உளமாரப் புகழ்ந்து, வாழ்த்திக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள் பேசியதாவது:**



மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற மனப்பக்குவம் குறைந்து வருகிற காலம் இது. இந்த நாளில் தான் படும் துயரை எடுத்துச் சொல்லி புரட்சித் தலைவியிடம் விண்ணப்பித்தால், அந்தச் செய்தி ஊருக்குத் தெரிவதற்கு முன் உதவி செய்து முடித்து விடுகின்ற மனித நேயத்தின் சிகரம்தான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மற்றவர்கள் பிரமிக்கின்ற வகையில் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் ஆற்றல் படைத்தவர். 69 சதவிகித இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை பற்றி எந்த ஒரு தலைவரும் சிந்திப்பதற்கு முன்பே, செயல்பட்டவர் நமது முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை மேற்கொண்ட 6 மாதத்திற்குப் பிறகுதான் மற்ற தலைவர்கள் பேசவே ஆரம்பித்தார்கள்.

69 சதவிகித இடஒதுக்கீட்டுப் பிரச்சினை குறித்துப் பிரதமரைச் சந்தித்துப் பேசுகிறார் புரட்சித் தலைவி. முடியாது என்று சொல்ல முடியாது என்கிற அளவுக்குத் திறமையாகப் பக்குவமாக இருக்கிறது புரட்சித்தலைவி அவர்களது வாதம்.

70 ஆண்டுகாலப் பிரச்சினையை 20 நிமிடங்களில் பேசி முடித்து, தீர்த்து வைத்தார் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

உடன் வந்திருந்த மற்ற அரசியல் கட்சித் தலைவர்களைப் பார்த்து, "நீங்கள் ஏதாவது சொல்லுங்கள்" என்று புரட்சித்தலைவி அவர்கள் கேட்க, "நாங்கள் சொல்வதற்கென்று எந்தச் செய்தியையும் நீங்கள் விட்டு வைக்கவில்லையே" என்று பெருமையுடன் அவர்கள் பதில் சொல்லும் அளவுக்கு ஆற்றல் பெற்றவர் நமது முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

அத்தகைய ஆற்றல் பெற்ற தலைவர் ஆற்றிய உரைகளின் தொகுப்பான "புரட்சித்தலைவியின் முழக்கம்" நூலை மக்கள் தங்கள் இதயத்தில் வைத்துக் கொள்வார்கள்.

**மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:**

தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், திரைப் படத்துறையினருக்கு அறிவுரை கூறிய முதல் நிகழ்ச்சி தொடங்கி, 10 வது நிதிக்குழுவின் நிறைவுரை நிகழ்த்தியது வரை 54 உரைகளைத் தொகுத்து அழகிய நூல் வடிவமாகத் தந்திருக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பேற்று இதுவரை நிகழ்த்திய சாதனை என்ன? நிகழ்த்தப் போகும் திட்டங்கள் என்னென்ன



என்பதைத் தெளிவுடன் விளக்கும் நூல் தான் புரட்சித்தலைவியின் முழக்கம்! இந்த நூல் வெளியிட இவ்வளவு பெரிய விழாவா என்று கூட கேட்கிறவர்கள் சிலர் இருக்கிறார்கள். கூந்தல் இருக்கிறவள் அள்ளி முடிகிறாள் இல்லாதவளுக்கு ஏன் வாய்ச்சவடால்? என்கிற கிராமத்து வழக்கே அவர்களுக்குப் பதில். ஒரு சிறிய அரங்கில் கூட்டம் போட்டுச் சொல்லி இருக்கலாம். ஆனால், நமது சாதனைகளை மக்கள் மன்றம் முன்னர் எடுத்துவைக்கிற நிகழ்ச்சியாக, மாபெரும் விழாவாக மதுரையம்பதியில் நடை



தொடர்ச்சி 41 ஆம் பக்கம் பார்க்க

# வளரும் வேளாண்மை

ஜூன் 1993 முதல் செய்துவருகிறது. இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்யப்படும் வானிலை சம்பந்தப் பட்ட வெப்ப நிலை, உதாரண மாக, அதிக மற்றும் குறைந்தபட்ச

## மழையைப் பற்றிய முன் அறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், புதுதில்லி யிலுள்ள மத்தியக்கால வானிலை முன் அறிவிப்பு மையமும், இணைந்து ஆய்வு செய்து மழைவருவதைப் பற்றிய மத்தியக் கால முன் அறிவிப்பைக் கடந்த ஆண்டு

வெப்பநிலை மழை அளவு, காற்றின் ஈரப்பதம், சூரிய வெப்பம் போன்றவை புதுதில்லிக்கு அனுப் பப்பட்டு, அங்கு அவை கணிப் பொறியின் உதவியுடன் ஆய்வு செய்யப்பட்டு மழை வருவதற்கான முன் அறிவிப்பு பெறப்படுகிறது.

பெறப்பட்ட முன்அறிவிப்பையும், பதிவு செய்யப்பட்ட மழை அளவையும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது, மழை வருவது, அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலோ அல்லது ஒருநாள் முன்னரோ அல்லது பின்னரோ பெறப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. எவ்வாறு இருப் பினும் அறிவித்த மழை அளவுக் கும், பதிவு செய்யப்பட்ட மழை அளவுக்கும் அதிக வேறுபாடு காணப்படவில்லை. எனவே, இந்த முன் அறிவிப்பைப் பயன்படுத்திட வேளாண்மைச் செயல்முறை களைத் திட்டமிட்டுப் பயன் பெறலாம்.

## பெல்லாரி மற்றும் சிறிய வெங்காய விதைத் தொழில் நுட்பம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகக்கழக விதை நுட்ப வியல் துறையில் பெல்லாரி மற்றும் சிறிய வெங்காய விதை உற்பத்தித் தொழில் நுட்பத்திற்கான ஆராய்ச் சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட முடிவுகள் கிடைத்தன:

ஒரு கிலோ வெங்காய விதைக்கு 2 கிராம் திரம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து 700 காஜ் அடர்த்தியான பாலித்தீன் பைகளில் இட்டு, எட்டு மாதங்கள் வரையில் 68 சத முளைப்புத் திறனுடன் சேமிக்கலாம்.

ஐந்து மாதம் சேமித்த பெல்லாரி மற்றும் சிறிய வெங்காய விதை களை டை சோமியம் பாஸ்பேட் இரசாயனக் கரைசலில் இரண் டரை மணி நேரம் ஊற வைத்து பின் 8 சத ஈரப்பதத்திற்கு உலர்த் திச் சேமிப்பதால் விதைகளின் வீரியம் மற்ற முளைப்புத் திறனை 8 மாதங்கள் வரை சீரிய முறையில் பாதுகாப்பதோடு, 7.7 சதவிகித அதிக மகசூலும் பெறலாம்.

## மண்ணில் பூஞ்சானக்கொல்லி மருந்தின் நிலைப்புத்திறன்

விவசாயத்தில் பூஞ்சானக் கொல்லி மருந்துகள் பெருமளவில் நோய்த் தடுப்பு மருந்தைச் சரியான அளவில் பயன்படுத்தாத காரணத் தினால், பல சுற்றுப்புறச் சீர் கேடுகள் ஏற்படுகின்றன. அதோடு மட்டுமல்லாமல், முறையற்ற பூஞ் சானக் கொல்லி மருந்தின் உப யோகத்தினால் மண்ணுக்கும் விளை பொருள்களுக்கும் அநேகச் சீர்கேடு ஏற்படுகிறது. எனவே, மண்ணில் பூஞ்சானக் கொல்லி மருந்தின் இயக்கம் மற்றும் அதன் விளைவுகளைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

காய்கறிப் பயிர்களில் ஏற்படும் இலைக் கருகல் மற்றும் இலைப் புள்ளி நோய்களைக் கட்டுப்படுத்து வதற்காக, குளோரோதலோனில் என்றதொரு வகை பூஞ்சானக் கொல்லி மருந்தினால், வண்டல், கரிசல், செம்புறை மற்றும் செம் மண் வகைகளில் ஏற்படும் இயக் கத்திறன், நிலைப்புத் தன்மை மற்றும் அழிவுத்தன்மை பற்றியும், இதுமாதிரியே, தக்காளி மற்றும் மிளகாய் போன்ற பயிர்களில் இப்பூஞ்சானக் கொல்லி மருந்தின் நிலைப்பு மற்றும் பரவும் தன்மை பற்றியும் அறிவதற்குச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மண்ணில் குளோரோதலோனில் மருந்தின் இயக்கத்திற்கு, மண்ணில் உள்ள அங்ககப் பொருள்கள், களி மண் அளவு மற்றும் கார அமிலத் தன்மை போன்றவை காரணி களாக இருக்கின்றது என ஆய்வின் மூலம் தெரிய வருகிறது. இதனால் செம்புறை மண் வகையில் குளோரோதலோனில் மருந்தில் நிலைப்புத் தன்மை அதிகமாகவும், செம்மண் வகைகளில் குறைவாக வும் இருக்கிறது.

தக்காளி மற்றும் மிளகாய்ப் பயிர்களில் ஆய்வு மேற்கொண்டால், குளோரோதலோனில் பூஞ் சானக் கொல்லி மருந்தைத் தெளிக்கும் அளவிற்கு ஏற்ப, மிளகாய் அதிக நாட்களுக்கும் தக்காளியில் குறைந்த நாட்களுக் கும் நீடிக்கிறது. தக்காளியிலும் மிளகாயிலும் பூஞ்சானக் கொல்லி மருந்தின் நச் த்தன்மை 15 நாட்கள் வரை நீடிக்கிறது. எனவே, மருந்தினைத் தெளித்த (0.2 சத அளவு) 6.0 நாட்களுக்குப் பிறகு தக் காளியையும், 6.5 நாட்களுக்குப் பிறகு மிளகாயையும் அறுவடை செய்வதால் எந்தத் தீங்கும் ஏற்பட வாய்ப்பில்லை என்று பரிந்துரைக் கப்படுகிறது.

வேளாண் தகவல் பணி மையம்
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.



# “அண்ணாவின் எழுத்தோவியங்கள் அரசுடைமை!”

## “கச்சத்தீவை மத்திய அரசு காலவரையற்ற குத்தகைக்குப் பெற்றுத் தரவேண்டும்!”

## நாகை—அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் பெருமிதம்

‘கண்ணியத்’தின் மறு பெயராகவும் மத நல்லிணக்கத்தின் இலக்கணமாகவும் திகழ்ந்த, காயிதே மில்லத் அவர்களின் திருப்பெயரைத் தாங்கிய, இந்த மாவட்டத்திற்கு வருகை தந்து, மலர்ந்த முகத்துடன் வீற்றிருக்கும், உங்கள் அனைவரையும் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் இலட்சியக் கனவுகளை நிறைவேற்றி











வருகின்ற உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையின் அமைந்த இந்த அரசு – உங்கள் அரசு 1991-ஆம் ஆண்டு, தஞ்சாவூர் மாவட்டத்தின் நிர்வாக நலனைக் கருதி, மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, கண்ணியம் மிக்க காயிதே மில்லத் அவர்களின் பெயரைச் சேர்த்து, இந்த மாவட்டத்திற்கு, 'நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்', என்று பெயர் சூட்டி மகிழ்ந்தது. மாவட்டத் துவக்க விழாவிற்குப் பின்பு, நான் நாகப்பட்டினத்திற்கு வருகை தந்திருந்தாலும், விழாக் கோலம் பூண்டு உள்ள நிலையில், நாகப்பட்டினம் நகரத்திற்கு மீண்டும் வந்து, உங்களையெல்லாம் சந்திக்கின்ற, வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி, மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த நாகப்பட்டினம் பகுதி, ஒரு காலத்தில் பிரசித்தி பெற்ற ஒரு துறைமுகமாக விளங்கியது என்பதை, 15-ஆம் நூற்றாண்டின் கல்வெட்டுகளிலிருந்து, தெரிந்து கொள்ள முடிகிறது. பர்மாவுக்கும், இலங்கைக்கும், இடையேயான கப்பல் போக்குவரத்து, நாகப்பட்டினம் துறைமுகம் வழியே நடைபெற்று வந்ததைச் சரித்திர ஏடுகள் சுட்டிக் காட்டுகின்றன. போர்ச்சுகீசியர்களும், டச்சுக்காரர்களும், டேனிஷ்காரர்களும், பின்னர் ஆங்கிலேயர்களும், இந்தத் துறைமுக நகரத்தைத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்குப் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார்கள். ஒரு புறம், மாபெரும் ஆதிக்கப் போராட்டத்தையும், அதன் விளைவாகப் பின்னர் எழுந்த கலாச்சாரப் போராட்டத்தையும் சந்தித்த பூமி இது. தரங்கம்பாடியில் உள்ள கோட்டை, இன்றும் டேனிஷ்காரர்களின் கட்டடக் கலையின் சிறப்பை, உலகிற்கு எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கிறது.

மூன்று கடல்கள், கன்னியா குமரியில் சங்கமம் ஆவது போல, இந்த மாவட்டத்தில், மூன்று மதங்களும் சங்கமம் ஆகின்றன என்றால், அது மிகையாகாது. இந்த



மாவட்டத்தில், இந்துக்கள், முகமதியர்கள், கிறித்தவர்கள், போன்ற அனைத்து மதத்தினரும், வித்தியாசம் ஏதுமின்றி, மத நல்லிணக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக, வாழ்ந்து வருகிறார்கள் என்ற உண்மை, நமக்கெல்லாம் பெருமை தரும் செய்தி ஆகும்.

'Our Lady of Health' என்று நாம் தொழுகை புரியும் வேளாங்கண்ணி மாதா கோயிலையும், நாகூரிலுள்ள, 'Saint Hazarath Syed Shahul Hameed Qudir Vali Ganjasavoy Andavar' தர்காவையும் மற்றும், சிக்கல் சண்முகவேலர், திருக்கடையூர் சிவன், நாகப் பட்டினம் நீலாயதாக்ஷி அம்மன் திருக்கோயில்களையும், தன்னகத்தே கொண்ட இந்த மாவட்டத்தில் எல்லா மதத்தின் வழிபாட்டுத் தலங்களுக்கும், இந்த மாநிலத்தில் உள்ளவர்கள் மட்டுமின்றி, இதர மாநிலங்களில் இருந்தும், மக்கள் வித்தியாசமின்றி வந்து வழிபட்டுச் செல்வதைக் கண்கூடாகக் காணலாம்.

பூம்புகார், கோடியக்கரை வன விலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம், உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் போன்ற பல்வேறு சுற்றுலாத் தலங்களைத், தன்னகத்தே கொண்ட இம்மாவட்டம், பல்வேறு கவின் கலைகளை, வளர்த்த பெருமையையும் படைத்தது. தமிழகத்தின் கலை வளர்ச்சிக்குத் தஞ்சைப் பூமியின் பங்கை, எவ்வளவு சொன்னாலும் தகும்.

இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, இன்று, 135 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை, அர்ப்பணிக்க வந்துள்ளேன். இன்று, 26 கோடி ரூபாய், செலவில், ஏற்கெனவே முடிவடைந்த திட்டங்களைத் துவக்கி வைத்ததிலும், 97 கோடி ரூபாய் மதிப்பில், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 54,000-க்கும் மேற்பட்ட, இம்மாவட்டத்து வாழ் மக்களுக்கு, 12 கோடி ரூபாய் செலவில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, இதே விழா மேடையில், வழங்க உள்ளதையும் எண்ணி, நான் பெருமிதம் அடைகின்றேன்.



திராவிட இயக்கத்தின் திருவிளக்காம், பேரறிஞர் பெருந்தகை, அண்ணா அவர்களின் பிறந்த நன்னாளை, நாம் மகிழ்ச்சிப் பெருக்குடன், இன்று கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அரசியல் நாகரிகத்திற்கும், தூய்மையான பொது வாழ்விற்கும், தனது இலட்சியங்களால் அடிக்கல் நாட்டிய, நமது அரசியல் ஆசான் அவர்களின் பிறந்த நாளை, உங்கள் அனைவருடனும் கொண்டாடி மகிழ்கின்ற, பேறு கிடைத்ததை எண்ணிப் பேருவகை அடைகிறேன்.

எந்த ஒரு மாமனிதரின் பேச்சுக்கள், நமக்கு வேதமாக இருக்கின்றதோ எந்த ஒரு மாமனிதரின் எழுத்துக்கள், நமக்கு இலட்சியங்களாக மிளிர்கின்றதோ அந்த அணையாத அறிவுத் தீபம், பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியங்களை, அரசுடைமையாக்கி, இன்று ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவரது பிறந்த நாளுக்கு, உங்கள் அனைவரின் சார்பிலும், உங்கள் அன்புச் சகோதரி, செலுத்துகின்ற காணிக்கை இது.

அண்ணாவின் அரசியல் சிந்தனைக் களஞ்சியங்களும், செந்தமிழுக்கு அவர் ஆற்றிய அரும் பணிகளும், இனி அரசுடைமை ஆகும். அவரது படைப்புகள் அனைத்தையும், இனி யார் வேண்டுமானாலும், அச்சிட்டு வெளியிடலாம். அதன் மூலம், அவரது உலகளாவிய கொள்கைகளும், திராவிட இயக்க இலட்சியங்களும், தமிழகத்தில் மட்டுமின்றி, இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் – ஏன், உலகம் முழுவதும் பரவும் என்பதை, எண்ணிப் பார்க்கும்போது எனக்குள் ஒரு ஆனந்தப் பூரிப்பு ஏற்படுகின்றது.

அண்ணாவின் கொள்கைகளையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் இலட்சியங்களையும் நடைமுறைப் படுத்திவரும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, தமிழகத்திற்கு

ஒரு உன்னதமான எதிர்காலத்தை, ஏற்படுத்திக் கொடுக்கும் மக்கள் பணியில், ஒரு புதிய உத்வேகத்துடன், தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் என்று இந்த நன்னாளில் உறுதிகூற விரும்புகிறேன்.

அண்ணாவின் எழுத்தோவியங்கள், அரசுடைமை ஆக்கப்படுவதால், அதற்குரிய மதிப்பு, விரைவில் நிர்ணயிக்கப்பட்டு, அவரது குடும்பத்திற்கு, அந்த மதிப்புத் தொகை வழங்கப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரும்பான்மையாகக் கிராமங்களையும், விவசாயத் தொழிலை நம்பியுள்ள மக்களையும், கொண்ட இந்த மாவட்டத்தில், புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி, வளர்தொழில்கள் வளரச் செய்ய வேண்டும், என்ற ஆர்வத்தின் அடிப்படையில், அதற்குரிய ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும், எனப் பணித்திருந்தேன். இம்மாவட்டத்தில் கிடைக்கின்ற கச்சாப் பொருட்கள், இயற்கையாக அமைந்துள்ள மனித வளம், தொழில் நுட்பம், போக்குவரத்து வசதி, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, சில புதிய தொழிற்சாலைகளை, இம்மாவட்டத்தில் உருவாக்க, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. Phenol-லையும், அதன் உப பொருளான Acetone-ஐயும், தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையை, 100 கோடி ரூபாய் செலவில், இம்மாவட்டத்தில் ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள், ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமீப காலமாக, இந்த மாவட்டத்து மக்களைப் பாதிக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினையை, எங்கள் அரசு, உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது. மீன் வளத்தைப் பெருக்குவதற்காகக் கடற்கரையோர மாவட்டங்களின், உப்புத் தன்மையுடைய நீரைக் கொண்டு, இறால் மீன் பண்ணைகள் அமைப்பதால் எழுந்துள்ள பொருளாதார, மற்றும் சமூகப் பிரச்சினைகளைப் பற்றித்தான், நான் குறிப்பிடுகிறேன்.

இன்று தமிழ்நாட்டில் உள்ள, பல கடற்கரையோரக் கிராமங்களில், இறால் மீன் பண்ணைகள், மற்றும் மீன் பண்ணைகள், அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இந்த இறால் பண்ணைகளில், கடல் உப்பு நீரைத் தொட்டிகளில் தேக்கி வைப்பதாலும், திறந்த கால்வாய்கள் வழியாகக் கடல் நீரைப் பண்ணையில் உள்ள தொட்டிகளுக்குக் கொண்டு செல்வதாலும் இந்த உப்புத் தன்மை, நிலத்தடி நீரையும், பண்ணைக்கு அருகில் அமைந்துள்ள, விவசாய நிலங்களின் மண் வளத்தையும், பாதித்து வருவதையும் சில இடங்களில், இதனால் சுற்றுப்புறச் சூழலுக்கும், தீங்கு உண்டாகும் சூழ்நிலைகள் எழுந்துள்ளதையும் இதன் காரணமாகத் தேவையற்ற சமூக இடர்ப்பாடுகள் ஏற்பட்டு வருவதையும் நான் நன்கறிவேன்.



தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும் என்று, நாம் விரும்பும் அதே நேரத்தில், வேளாண் தொழிலுக்கு, எள்ளளவும் குந்தகம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலும் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படாமல், பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, மிக உறுதியாக உள்ளது. நிகழ்காலத்தில் கிடைக்கும், ஒரு சிறு இலாபத்திற்காக, எதிர்காலத்தைப் பாதிக்கும் செயல்களை, நிச்சயம் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். சுற்றுப்புறச் சூழலையும், நமது இயற்கை அன்னை அளித்த வளங்களையும் ஊனப்படுத்திவவிடக் கூடாது என்பதில், நான் மிகுந்த தீவிரம் காட்டி வருகின்றேன். அடுத்த தேர்தலைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிட்டு, அடுத்த தலைமுறையைப் பற்றிக் கவலைப்படுகின்ற, அக்கறை கொண்டிருக்கின்ற, ஒரு அரசு தான் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு.

எனவேதான், இறால் மீன் பண்ணைகள் அமைப்பதால், எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்காகக் கடந்த மாதம், எனது ஆணையின் பேரில், ஒரு

'வல்லுநர் குழு' (ExpertCommittee) ஏற்படுத்தப்பட்டது.

இந்தக் குழு, கடலோரக் கிராமங்களில், இறால் மீன் பண்ணைகள் அமைப்பதற்கு, அனுசரிக்க வேண்டிய வரைமுறைகளையும், நிபந்தனைகளையும், வகுத்துக் கொடுக்கும். மேலும், தனி நபர் இலாபத்தை மட்டுமே கருத்தில் கொண்டு, நல்ல விளை நிலங்கள், இறால் மீன் பண்ணைகளாக, உருவாவதைத் தடுக்கவும் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களின், மரபு சார்ந்த முறையில் கடற்கரைப் பகுதிகளையும், கடல் நீரையும், உபயோகிக்கின்ற உரிமைகளைப் பாதுகாக்கவும் கடற்கரையின் தொடர்ச்சியைப் பாதிக்கின்ற அளவில், பண்ணைகள் ஏற்படுவதைத் தடுக்கவும் கடலோரக் கிராமங்களில் வசிக்கும் மக்கள், இதுவரை அனுபவித்து வந்த, பாதை உரிமை போன்ற, மரபு வழி உரிமைகள், பாதிக்கப்படாமலும், நிலத்தடி நீர் பாதிக்கப்படும் விதத்தைத் தடுக்கும் உத்திகளைக் கண்டறிவதும் இந்தக் குழுவின் நோக்கங்களாகும்.

மேலும், இந்தப் பண்ணைகளிலிருந்து வெளியேற்றப்படும், கழிவு நீரின் நச்சுத் தன்மையை அறிவதோடு நிலம், காற்று, ஆகாயம் ஆகியவற்றிற்கு, இந்த மாசுகளால் ஏற்படுகின்ற பாதிப்பைத் தவிர்ப்பதற்கு, மேற்கொள்ளப்பட வேண்டிய, தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், இந்தக் குழு முழுமையாக ஆராய்ந்து, தனது பரிந்துரைகளை வழங்கும்.

எனவே, நடைமுறையில் உள்ள, விவசாய விளை நிலங்கள் பாதிக்கப்படாமலும் சுற்றுப்புறச் சூழல் கெடாமலும், இறால் மீன் பண்ணைகள் அமைக்கின்ற, புதிய வரைமுறைகளை, மிக விரைவில் எங்கள் அரசு வெளியிடும். சுற்றுப்புறச் சூழல் எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்க்கை, மக்களின் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, உங்கள் சகோதரியின் அரசு, இந்தப் பிரச்சினையில் நல்ல முடிவுகளை எடுக்கும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாவட்டத்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், பொதுமக்கள், இது குறித்து தேவையற்ற கவலையிலும், பிரச்சினையிலும், ஈடுபட வேண்டாம் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக, நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தேவையற்ற முறையில் இந்தப் பிரச்சினையைப் பூதாகரமாக்கி, மக்கள் மனதில் ஒரு பீதியை உண்டாக்குகின்ற முயற்சியில், யாரும் ஈடுபடக் கூடாது என்பதே, எனது வேண்டுகோள். அதே நேரத்தில், இந்தக் கட்டுப்பாட்டை மீறுபவர்களைப் பார்த்துக் கொண்டு, இந்த அரசாங்கம் கைகட்டிக் கொண்டு வாளா இருக்காது என்பதைச் சுட்டிக் காட்டுவதும், எனது கடமை என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டில், வெளிச் சந்தையில் விற்கப்படும் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை, உயர்ந்துவிடக் கூடாது என்பதற்காக, விவசாய விளை பொருட்களின் நடமாட்டத்திற்கு, சில தடையும் கட்டுப்பாடுகளும், இருந்து வந்தன. இந்த நடமாட்டக் கட்டுப்பாடுகளால், விவசாயிகளின் நலன் பாதிக்கப்படுவதையும், பொதுமக்களுக்குச் சில வகையில் இடையூறுகளாக இருப்பதையும் அறிந்த நாங்கள், பதவி ஏற்ற குறுகிய காலத்தில், இந்தக் கட்டுப்பாடுகளைப் படிப்படியாகத் தளர்த்தி, விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கப் பல அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டோம். விவசாயிகளின் நலன் காக்க, ஒரு தொலை நோக்குப் பார்வையுடன், லெவி



கொள்முதலை அடியோடு ரத்து செய்தோம். தாலுக்கா அளவில் நடமாட்டக் கட்டுப்பாட்டைத் தளர்த்தினோம். மாவட்ட அளவிலான சோதனைச் சாவடிகளை ஒழித்தோம். காவிரிப் பாசனப் பகுதியில், கடந்த பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வந்த, ஏகபோகக் கொள்முதல் முறையை ரத்து செய்து, மற்ற மாவட்டத்து விவசாயிகளைப் போல, இப்பகுதி வாழ் விவசாயிகளும் தங்களது விளை பொருட்களைத் தாங்கள் விரும்புகின்ற விலையில் விற்பதற்கான உரிமையை மீட்டுக் கொடுத்தோம்.

அதே நேரத்தில், நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்துவதிலும், நாங்கள் தயக்கம் காட்டியது இல்லை. சாதாரண ரக நெல்லின் கொள்முதல் விலை, ஒரு குவிண்டாலுக்கு, *230* ரூபாயிலிருந்து *340* ரூபாயாக, படிப்படியாக இந்த மூன்று ஆண்டுகளில், உயர்ந்து உள்ளதை, இந்த நேரத்தில், பெருமிதத்துடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உயரிய விதை நெல், மானியத்துடன் கூடிய இடுபொருட்கள், வீடு தேடிச் சென்று தொழில் நுட்ப அறிவுரைகள், தாராளக் கடன் உதவி, ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுக்குச் சேவை செய்து வருகிறது. எங்கள் அரசு, நெல் உற்பத்தியில் இன்று, ஒரு புதிய குறியீட்டினை நாம் எட்டி உள்ளோம். அதன் விளைவாக, **J.J.92** போன்ற உயர்ந்த ரக அரிசியை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் கிறேன். மேலும் **T.K.M. 9** ரக அரிசியை, வெளிமாநிலங்களுக்கு விற்க எங்கள் அரசு அனுமதி அளித்து இருந்ததால், விவசாயிகள் பெருமளவு இலாபம் அடைந்திருக்கிறார்கள் என்பதை அறியும்போது, நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.



அதே நேரத்தில், விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை விற்பதற்குச் சிரமம் ஏற்படாமல் இருக்க, நெல் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை, சென்ற ஆண்டு அளவில் இருக்க வேண்டும் என்றும், அந்த நிலையங்களுக்கு வருகின்ற நெல்லைக் கண்டிப்பாக வாங்கவேண்டும் என்றும், நான் ஆணை பிறப்பித்துள்ளேன்.

விவசாயிகளின் நலன் காக்க, நாங்கள் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள அதே நேரத்தில், நுகர்வோரின் நலன் காக்க, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கும் பொருட்களுக்காக, **400** கோடி ரூபாய் அளவில் மானியச் சுமையை ஒவ்வொரு ஆண்டும் இந்த அரசு தொடர்ந்து ஏற்றுக் கொண்டு வருகிறது என்பதையும், பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவப் பெருங்குடி மக்களின் நலவாழ்விற்குப் பல்வேறு நலத் திட்டங்களை, முனைப்புடன் செயல்படுத்தி வருகின்ற, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, இம்மாவட்டத்தைப் பொருத்த வரையில், கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும், 72 மீனவர்களுக்கு **2** கோடியே **50** இலட்சம் ரூபாய் செலவில், உதவிகளை வழங்கி உள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் கிறேன். எங்கள் அரசு கான்கிரிட் வீடுகளைக் கட்டி, மீனவர்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றது. இம்மாவட்டத்து மீனவர்களுக்கு, கடந்த *3* ஆண்டுகளில், ஒரு கோடியே **12** இலட்சம் ரூபாய் செலவில், **428** கான்கிரிட் வீடுகள், கட்டித் தரப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, ஒரு கோடி ரூபாய் செலவில், மேலும் **200** வீடுகள், கட்டித் தரப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள, **500** கடற்கரை ஓரக் கிராமங்களில் உள்ள, அடிப்படை வசதிகளை மேம்படுத்துறகாக, "ஒருங்கிணைந்த கடலோர மீனவக் கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம்" ஒன்று, வடிவமைக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம், மிக விரைவில் செயல்படுத்தப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் கடற்கரையோரக் கிராமங்களில் வசிக்கும் மீனவப் பெருங்குடி மக்களின் நல் வாழ்க்கைக்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகின்ற உங்கள்



**அண்ணா துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டு**
**வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழியில்-பண்ணாவன்**
**சிற்பனெழுத் தோவியத்தில் செவ்வரசு நாவாயின்**
**அற்புதஞ்சூழ் மாலுமியென் றாடு.**

**—தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

அன்புச் சகோதரியின் அரசு, உங்களின் அரசு கச்சத் தீவுப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டு வருகின்றது.

ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும், மீனவப் பெருங்குடி மக்கள் நிம்மதியாக, பாது காப்புடன் தங்கள் தொழிலை மேற்கொள்ள மத்திய அரசு ஒரு சில நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்தக் கூட்டத் தின் வாயிலாகக் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

இலங்கை நாட்டு அரசியலில் இப்போது ஏற்பட்டுள்ள தலைமை மாற்றத்தை இந்திய அரசு பயன்படுத்தி, கச்சத் தீவைக் காலவரையற்ற குத்தகைக்கு— அதாவது Lease in Perpetuity க்கு பெற்றுத்தர வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். நிச்சயமாக மத்திய அரசால் இதைச் செய்ய முடியும்.

எனவே, மத்திய அரசு தமிழக மீனவர்களுக்கு மட்டுமின்றி, இந்திய மீனவர்கள் அனைவரும் பயன்பெறும் இந்தப் பணியை, விரைவில் மேற்கொள்ள வேண் டும் என்று வற்புறுத்த விரும்பு கிறேன்.

கச்சத்தீவைக் காலவரையற்ற குத்தகைக்குப் பெற்றுவிட்டால், அந்தத் தீவைச் சுற்றியுள்ள கடல்நீரில், மீன் பிடிக்கும் உரிமை இயற்கையாக, இந்திய மீனவர் களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் கிடைத்துவிடும் என்பது உறுதி. அதன்மூலம் பல்வேறு பிரச்சி னைகளுக்கு நாம் தீர்வு காண் பதும் திண்ணம். எனவே, மத்திய அரசு எனது கோரிக்கையை ஏற்று கச்சத்தீவைக் காலவரையற்ற குத்தகைக்குப் பெற்றுத்தர வேண டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாவட்டத்தைச் சார்ந்த, ஆதி திராவிடப் பெருங்குடி மக்களுக்கு, ஆறு கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில், இந்த ஆண்டு, 2,800 தொகுப்பு வீடுகள் கட்டி, இலவசமாக வழங்கப்படும் என் பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரி வித்துக்கொள்கிறேன். அதற்கான அடிக்கல்லை, இன்று நான் நாட்டியுள்ளேன்.

மேலும், 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள, 1,504 தொகுப்பு வீடுகளை, இன்று நான் திறந்து வைத்ததிலும், மன நிறைவு அடைகின்றேன்.

பாமணி, கத்தூர், உப்பூர், பாப்பா கோயில், தேமங்கலம், குடவாசல், மணல்மேடு, ஆகிய 7 குடிநீர்த் திட்டங்களை, ஒரு கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில், மேற்கொள்வதற்காக, இன்று அடிக்கல் நாட்டியதிலும்— சீர்காழி குடிநீர்த் திட்டம் உட்பட, 14 குடிநீர்த் திட்டங்களை, இரண்டரைக் கோடி ரூபாய் செலவில், இன்று துவக்கி வைத்ததிலும் நான் உண்மையில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஊரகப் புறங்களிலும், வீட்டு வசதியை, உண்டாக்கித் தர வேண்டும் என்ற எங்கள் முயற்சி யின் விளைவாக, 60 இலட்சம் ரூபாய் செலவில் உருவான, 24 குடியிருப்புகளைத் திறந்து வைத்த திலும், மன்னார்குடி, திருவாரூர் ஆகிய இடங்களில், 8 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில், கட்டப்பட உள்ள 425 குடியிருப்பு களுக்கு, அடிக்கல் நாட்டியதிலும், நான் பெருமகிழ்ச்சி அடை கின்றேன்.

மேலும் தொழிற்சாலைப் பகுதிகள் அல்லாத இடங்களில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பழுதடைந்துள்ள, 48 சாலை களைச் செப்பனிட்டுச் சீரமைக்க, இந்த ஆண்டு, ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில், நாகூர், திட்டச்சேரி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில், 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில், 136 குடியிருப்புகள் கட்டப்படும் என் பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினத்தில், வெங்காயக் கூடை முடைவோருக்கு என்று, தனியே ஒரு குடியிருப்பு 40 இலட்சம் ரூபாய் செலவில், அமைத்துத் தரப்படும் என்பதை யும் 3 கோடி ரூபாய் செலவில், குடிசைப் பகுதிகளை மாற்றி, அடுக்கு மாடி வீடுகள், கட்டிக் கொடுக்கப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புறங்களில் மட்டுமின்றி, கிராமப் புறங்களிலும், கூடுதல் மின் வசதியை வழங்கவேண்டும்— விவசாயத்திற்காக உபபோகப் படுத்தும், உயர் அழுத்த மின்சக்தி, தடங்கலின்றி, தொடர்ந்து- கிடைக்கவேண்டும் என்பதற்காக இன்று 11 கோடி ரூபாய் செலவில், பல்வேறு திட்டங்களுக்கு அடிக் கல் நாட்டியுள்ளேன்.

5 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில், மன்னார்குடி துணை மின் நிலையம், 33 கிலோ வோல்ட்டிலிருந்து, 110 கிலோ வோல்ட் மின்சக்தித் திறன் கொண்ட நிலையமாக உயர்த் தப்படும். ஒரு கோடியே 65

இலட்சம் ரூபாய் செலவில், நாகப் பட்டினம் துணை மின் நிலையம், 66 கிலோ வோல்டிலிருந்து, 110 கிலோ வோல்ட், மின்சக்தி திறன் கொண்ட, நிலையமாக மேம்படுத் தப்படும். புதிதாக, 4,000 தெரு விளக்குகளை அமைக்க, உங்கள் சகோதரியின் அரசு, ஒரு கோடி ரூபாய் செலவிடும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



**அரசியலோடு-நாகரிகத்தை அரசியலோடு-நாணயத்தை- அரசியலோடு நல்ல நோக்கத்தை-அரசியலோடு சனநாயகத்தை - அரசியலோடு உயர்ந்த பண்பாட்டை இணைத்துத் தந்த நல்ல சனநாயகவாதி அண்ணா அவர்கள்.**

**-டாக்டர் எம்.ஜி.ஆர்.**

மன்னார்குடி நகருக்கு அழகு சேர்த்து, அருள்பாலித்துக் கொண்டு வரும், அருள்மிகு ராஜகோபால் சுவாமி திருக்கோயிலின் திருப் பணி, 40 இலட்சம் ரூபாய் செலவில், மேற்கொள்ளப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மன்னார்குடி நகர எல்லைக்குள், பாமினி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள, கீழப்பாலம் மிகவும் குறுகியதாகவும், துரிதப் போக்கு வரத்துக்கு ஏற்றதாக இல்லாமலும் இருப்பதால், இந்தப்பாலத்தை,இரு வழிப்பாதை கொண்ட உயர் மட்டப் பாலமாக அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கை, இப்பகுதி வாழ் மக்களிடம் பல காலமாக இருந்து வருகின்றது. இந்தப் பாலத்தைக் கட்டித் தருவதாக, முன்னர் அளிக்கப் பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன என்பதையும், நான் நன்கு அறிவேன். காலங் காலமாக நடைபெறாத பல திட்டங்களைச் செயல்படுத்திவரும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, அதே உணர்வுடன், 22 கிராமங்களில் வசிக்கின்ற, கிட்டத் தட்ட 52,000 மக்கள் பயன் பெறும் வண்ணம், இந்தக் கீழப்பாலத்தைச் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில், இருவழிப் போக்குவரத்துக்கு ஏற்ற உயர்மட்டப் பாலமாக விரைவில் கட்டித் தரும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குரிய ஆயத் தப் பணிகளை விரைவில் மேற் கொள்ளவேண்டும் என, அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்துள்ளேன்.

மன்னார்குடி பொது மருத்துவ மனையும், பெண்கள் உயர்நிலைப் பள்ளியும், இடையூறுகள் நிறைந்த பகுதியில், வசதிக் குறைவுடன் செயல்பட்டு வருகின்றன. எனவே பொது மக்களின் விருப்பப்படி வேறொரு புதிய இடத்தில், இந்த மருத்துவமனையும், பெண்கள் உயர்நிலைப் பள்ளியும், கூடுதல் வசதிகளுடன் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என் பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மயிலாடுதுறை வட்டத்தில் அமைந்துள்ள கொரநாடு என்ற இடத்தில், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில், முதல் அனைத்து மகளிர் வங்கிக் கிளை ஒன்றை, இந்த விழாவில் துவக்கி வைத்ததில், நான் உண்மையில் பெருமிதம் அடைகின்றேன்.

இம்மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு அடையாளமாக விளங்கும், "கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை"யின் விரிவாக்கப் பணி, 34 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப் படும் என்பதை, மிக்க மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விரிவாக்கத்தின் மூலம், இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் உற்பத்தித் திறன், நாளொன்றுக்கு 1,250 டன்னி லிருந்து, 3,500 டன்னாக உயர்த் தப்படும் என்பதையும் தரமான சர்க்கரையை உற்பத்தி செய்வதற்கு, வழி வகுக்கும் என்பதையும் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் வாழ்க்கைத் தரம் உயர, அடிப்படை வசதிகளை, அனைத்து மக்களுக்கும் வழங்க, சமுதாய வளர்ச்சிப் பணிகளை, நாம் மேற் கொள்ளும் போது, ஒட்டுமொத்த மாகச் சமுதாயத்தின் அங்கத்தினர் களாகிய, ஒவ்வொரு தனி நபருக்கும், சென்றடைய வேண டும் என்ற சித்தாந்தத்தில், எனக் குப் பூரண நம்பிக்கை உண்டு. எனவேதான், ஒவ்வொரு மாவட் டத்திற்கும் நான் செல்லும் போது, ஒரு ஆத்மார்ந்த ஈடுபாட்டுடன், பல்லாயிரக் கணக்கான மக்க ளுக்கு, அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளை, வழங்கி வரு கிறேன். இத்தகைய தனிநபர் உதவிகள் மூலமாக, நலிவடைந்த பிரிவு மக்களின், வாழ்க்கை மேம் பாட்டிற்கு வழி வகுக்க முடியும் என்று, நான் திண்ணமாக நம்பு கிறேன்.

இன்று, 12 கோடி ரூபாய் செல வில், 54,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, அரசின் பல் வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க, ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. ஒவ்வொரு பயனாளி யையும் மேடைக்கு அழைத்து, நானே நேரில் உதவிகளை அவர் களுக்கு வழங்கி, எனது வாழ்த் துக்களை உரித்தாக்கிக் கொள்ள வேண்டும் என்று நான் நெஞ்சார விரும்பினாலும் இந்தக் குறுகிய காலத்தில், அவ்வாறு அனை வரையும் அழைத்துக்கொடுக்க, இயலாத காரணத்தினால், ஒரு சிலருக்கு மட்டும், இந்த விழா மேடையிலேயே வழங்க உள்ளேன்.

மற்றப் பயனாளிகளுக்கு, எனது சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அவர்கள் இருக்கின்ற இடத்திற்கே சென்று, அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்குவார்கள், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசின் உதவிகளை ஆதாரமாகக் கொண்டு, பயனாளிகள் அனைவரும், ஊக்கத்துடன் உழைத்து, வாழ்க்கையில் முன்னேறி, பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும் என்ற, எனது நெஞ்சத்துப் பேரவா வினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வளர்ந்துவருகின்றசமுதாயத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, நமது காவல் துறையை, நவீனமயமாக்குவதோடு, மனிதாபிமானமிக்க ஒரு மக்கள் உதவிப் படையாக, அதனை மாற்ற வேண்டியது, காலத்தின் அவசியம் என்பதை உணர்ந்து, நவீன ஆயுதங்களையும், போக்குவரத்து வசதிகளையும், தொலைத் தொடர்புச் சாதனங்களையும், காவலர்களுக்கு வழங்கி வருகிறது, உங்கள் சகோதரியின் அரசு.

காவல் துறையை நவீனமயமாக்குகின்ற, எனது ஆக்கப்பூர்வமான முயற்சிகளில் ஒன்றுதான், மாவட்டம்தோறும் அமைக்கப்பட்டுவரும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள். மகளிருக்கு எதிராக இழைக்கப்படுகின்ற, சமுதாயக் கொடுமைகள், பல நேரங்களில், அவர்களுக்கு என்று ஒரு அமைப்பு இல்லாத காரணத்தினால், வெளிவராமல், உள்ளேயே மறைக்கப்பட்டு விடுவதும் பின்னர் இதுபோன்ற, சமுதாயக் கொடுமைகளில் ஈடுபடுபவர்கள், சட்டத்தின் பிடிக்குள் சிக்காமல், தப்பிச் செல்லுகின்ற சம்பவங்களும் பல காலமாக நமது சமுதாயத்தில், நடைபெற்று வருகின்ற நிகழ்ச்சிகள் ஆகும். இத்தகைய கொடுமைகள், இன்னும் ஒரு தொடர்கதையாக ஆகாமல் தடுக்கவும் அவற்றிற்குச் சட்ட ரீதியான தீர்வினை, ஏற்படுத்தித் தருவதும் தான் இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களின், அடிப்படை நோக்கங்கள் ஆகும்.

மகளிரின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு நலத் திட்டங்களை நாளும் தீட்டி, முனைப்புடன் செயல்படுத்திவரும், உங்கள் சகோதரியின் அரசு — உங்கள் அரசு இந்தப் பணியையும், ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன், செயல்படுத்தி வருகின்றது. தொலை நோக்குப் பார்வையுடன், மகளிர் வளர்ச்சிக்கு, நாம் மேற்கொண்டு வரும் திட்டங்கள், பலரின் பாராட்டைப் பெற்று வருகின்றன. இந்தியத் துணைக் கண்டத்தில், வேறு எந்த மாநிலத்திலும், சிந்தித்துப் பார்க்காத ஒரு திட்டத்தை, நாம் நடைமுறைப்படுத்தி, இது முடியும் என்று நிரூபித்துக் காட்டி இருக்கிறோம். இது கவைக்கு உதவாது என்று, நமது சிந்தனையை உதாசீனப்படுத்தியவர்கள், இன்று வரவேற்கிறார்கள் பாராட்டுகிறார்கள். அண்டை மாநிலங்களும், ஏன், அண்டை நாடுகளும், நம்மை ஒரு முன்னோடியாகக் கொண்டு, இது போன்ற அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, அங்கேயும் துவக்கிவைத்து வருகின்றார்கள் என்ற செய்தி, தமிழ்நாடு, மற்ற மாநிலங்களுக்கும், மற்ற நாடுகளுக்கும், முன்னோடி என்ற உண்மையை, மீண்டும் மீண்டும் நிரூபித்துக்கொண்டு இருக்கிறது.

இந்த மாவட்டத்து மகளிரின் வளர்ச்சிக்காக, இம்மாவட்டத்திற்கான அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, நாகப்பட்டினம் நகரத்தில், இன்னும் சிறிது நேரத்திற்குப் பிறகு, அர்ப்பணித்து வைக்க உள்ளேன் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*11.3.1994* அன்று, தஞ்சைத் தரணியில் நடைபெற்ற அரசு விழாவைச் சீரோடும் சிறப்போடும் நடத்திக் காட்டிய, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், அன்பு அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள், இன்று நாகப்பட்டினத்தில், அதைவிட சிறப்பானதொரு விழாவை, ஒரு பெரிய மாநாடு போலப் பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்துள்ளார்கள். எந்தக் கடினமான பணியானாலும், அதை முக மலர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, தன்னைச் சுற்றியுள்ளவர்கள் அனைவரையும் அரவணைத்து, சிறப்பாகச் செயலாற்றி, எடுத்த பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடிக்கும் ஆற்றலும் அபூர்வமான நிர்வாகத் திறமையும் ஒருங்கே பெற்றவர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள். திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான, அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள், என்மீது அளவு கடந்த ஒரு பாசப் பிணைப்போடும், இயக்கப் பற்றோடும், தொண்டாற்றி வருகின்றார்.

அல்லும் பகலும், அயராது பாடுபட்டு, சலியாது உழைப்பதில், அவருக்கு நிகர் அவரேதான். அரசுப் பணியானாலும், இயக்கப் பணியானாலும், திறம்படச் செய்து

**தண்ணார் தமிழ்தழைக்கச் சாந்திச் சிறைசார்ந்த**
**பண்ணார் தமிழ்ச்சோலைப் பைங்கிளியாம் - 'அண்ணா'**
**மறைந்தா ரிலையேஇம் மாந்தருளம் எல்லாம்**
**நிறைந்தாரே என்றும் நிலைத்து.**

**—திருமுருக கிருபானந்தவாரியார்.**

முடித்து, நம் அனைவரது பாராட்டுதல்களைப் பெறும் செயல் திறன் படைத்த வல்லவர் அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள். நற்பண்புகள் நிறைந்த இவர், வளர்ந்து வரும் இன்றைய இளைய தலைமுறைக்கு, ஒரு அருமையான எடுத்துக்காட்டு என்பதை, என்னால் உறுதியாகக் கூற முடியும்.

இந்த விழாவைச் சீரோடும் சிறப்போடும் ஏற்பாடு செய்த, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்களுக்கு, என் மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றியையும், உரித்தாக்கிக் கொள்கிறேன். அவர் நீண்ட ஆயுளுடனும், நல்ல உடல் நலத்துடனும், பல்லாண்டுப் பல்லாண்டு வாழ்ந்து, தமிழ் நாட்டிற்கும், நமது இயக்கத்திற்கும், தொண்டாற்ற வேண்டும் என்ற, எனது பேரவாவினையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விழாவில், அவருக்கு உறுதுணையாக இருந்து செயலாற்றிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறை அலுவலர்களுக்கும், எனது நெஞ்சம் கனிந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைக் காண்பதற்காகவும், எனது உரையைக் கேட்பதற்காகவும், இங்கே பெருந்திரளாகக் குழுமியிருக்கின்ற, இம்மாவட்டம் வாழ் பெருமக்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற, எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன்.

***(15.9.1994 அன்று நாகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை முழு விவரம்)***

## ஆதிதிராவிட மாணவ மாணவியர்:

# பணியாளர் தேர்வுப் போட்டிகளில் கலந்துகொள்ள முன் பயிற்சி

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த மாணவ-மாணவியர்கள் பல்வேறு பணியாளர் தேர்வுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக முன் பயிற்சி அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின், Staff Selection Commission இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation of India), வங்கிப் பணியாளர்கள் தேர்வு வாரியம் (Banking Service Recruitment Board), ரயில்வே பணியாளர்கள் தேர்வாணை வாரியம் (Railway Recruitment Board) மற்றும் தமிழ்நாடு தேர்வாணைக் குழு (Tamil Nadu Public Service Commission) ஆகியவற்றில் கலந்து கொள்கின்ற ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன் பயிற்சி அளிக்கப்படும்.

வங்கிப் பணிகளில் எழுத்தர் தேர்வுக்காக (Banking Services Recruitment Board - Clerical Cadre Examination 1994) நடத்தப்படுகின்ற தேர்வுகளில் பணி நியமனம் பெறுவதற்கு 4,000 ஆதிதிராவிடர்களுக்கு 21 மாவட்ட மையங்களில் உடனடியாகப் பயிற்சி அளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார். இந்தப் பயிற்சி நிலையங்கள் விரைவில் ஆதிதிராவிட இன மாணவ மாணவியர்கள் தேர்வை மேற்கொள்வதற்கான பயிற்சியை வழங்கும்.



# நாகையில் அரசு விழா: நிகழ்ச்சி விவரம்

**மா**ண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அறிஞர் அண்ணா பிறந்த நாளான *15.9.1994* வியாழனன்று நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் நடைபெற்ற மாபெரும் அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

தஞ்சையிலிருந்து நண்பகல் 12.30 மணியள வில் ஹெலிகாப்டர் மூலம் நாகப் பட்டினத்திற்கு அவர் வருகை தந்தார். ரூ.135 கோடி மதிப்புள்ள அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தார்; 54,000-க்கும் மேலான ஏழை எளிய பயனாளிகளுக்குப் பலவகை அரசு நலத்திட்ட உதவிகளையும் தாம் பங்கேற்ற விழாவில் அவர் வழங்கிச் சிறப்பித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விழாப் பேருரைக்குப்பின், 3 மணியளவில், மிகப் பெரிய மாநாடு போல நடைபெற்ற இந்நிகழ்ச்சி முடிவுற்றது.

### விழாக்கோலம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வருகையை முன்னிட்டு, நாகப்பட்டினமே விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகள் தோறும் வாழை மரங்கள், வண்ணக் கொடிகள், மாவிலை- தென்னங்குறுத் தோலைத் தோரணங்கள் கட்டப்பட்டிருந் தன. எங்கு பார்த்தாலும் எண்ணற்ற வளை வுகள் எழிலோடு உருவாக்கப்பட்டிருந்தன. தஞ்சை-நாகை காயிதே மில்லத் மாவட்டச் சிறப்பம்சமான தென்னங்கீற்றுச் சப்பரங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்தன.

'நாகை காயிதேமில்லத் மாவட்டம் கண்ட புரட்சித் தலைவியே வருக...'

'மதமாச்சரியங்களைத் தகர்த்த மக்கள் தலைவியே வருக...'

'காவிரி தந்த தாயே வருக...'

- போன்ற வாசகங்கள் தாங்கிய வண்ண மயமான சுவரொட்டிகள், இரண்டு வரிசை வீடுகளோடும் வீதிகளின்மேலே கைகோத் துக் காட்சியளித்த பதாகைகள் நகரெங்கும் எழிற்கோலம் காட்டின.

அருள்மிகு தட்டையப்பர் கோயில் கோபு ரம், வேளாங்கண்ணி மாதாகோயில், நாகூர் தர்கா ஆகியவைகள் அச்சாகியிருந்த வர வேற்புச் சுவரொட்டிகள் ஏராளம் இருந்தன. 'மும்மதத்தின் ஒளி விளக்கே வருக' என்ற

வாசகம் அவற்றில் காணப்பட்டது.

எங்குபார்த்தாலும் நாதசுரக் கச்சேரி, திரையிசைப் பாடல்கள், நையாண்டி மேளம் போன்றவை ஒலித்தன. மயிலாட்டம், கோலாட்டம், சிலம்பாட்டமெல்லாம் நடத் தப்பட்டன.

**மாநாட்டைப் போல...**

வலிவலம் தேசிகா தொழில்நுட்பக் கல்லூரி திடலில் மாபெரும் மாநாட்டுக்குப் போல பிரம்மாண்டமான பந்தல் அமைக்கப் பட்டிருந்தது. வெயிலையும் பொருட் படுத்தாமல் சாரிசாரியாகக் காலை முதலே ஆண்களும் பெண்களும் வந்தவண்ணம் இருந்தார்கள்.

கோட்டைபோல் அமைக்கப்பட்டிருந்த மேடைக்கான நுழைவாயிலில்-அறிஞர் அண்ணா, டாக்டர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு முதல்வர் 'கட் அவுட்'டுகள் வைக்கப்பட்டிருந் தன. 'கலியுகத்தின் காவல் தெய்வமே வருக' என்று அவற்றுக்கு மேலே அழகுற எழுதப் பட்டிருந்தது. உள்ளே – கழுத்தை உயர்த்தி உயர்த்திக் குரல் கொடுத்து வரவேற்கும் 'டினோசர்' ஒன்று அமைத்திருந்தார்கள்.

முக்கிய மேடையில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, டாக்டர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு முதலமைச்சர் படங்கள் அணி செய்தன. பூச்சரங்கள் பொலிவுறத் திகழ்ந் தன. எங்கு நோக்கினும் ஆண்களும் பெண் களுமாக வெள்ளம்போல் மக்கள் கூட்டம்.

அதனருகே அமைக்கப்பட்டிருந்த சிறிய் தோர் சிங்கார மேடையில் காலை 10 மணி முதலே 'சோழன் போக்குவரத்துக் கழகத் தினரின் இசை நிகழ்ச்சி' நடத்தப்பட்டது.

**முதல்வர் வருகை**

வானில் - 12.30 மணியளவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகைதரும் ஹெலி காப்டர் காட்சியளித்ததுமே "புரட்சித் தலைவி வாழ்க" என்கிற வாழ்த்து முழக்கம் மண்ணதிர எழுந்தது.

அடுத்த சிறிது நேரத்தில் விழா நிகழிடத் திற்கு வந்து சேர்ந்தார் மாண்புமிகு முதல்வர். நாகை காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள கோயில்களிலிருந்தெல்லாம் கொண்டுவரப் பட்ட பிரசாதங்கள் அவருக்கு வழங்கப் பட்டன; பூரண கும்ப வரவேற்பு அளிக்கப் பட்டது. மாண்புமிகு முதல்வரோடு, மாண்பு மிகு அமைச்சர் பெருமக்களும் வருகை தந்தனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேடைக்கு வந்ததுமே - விண்ணை எட்ட வாழ்த்து முழக்கம் மீண்டும் எழுந்தது. மேடையின் நாலாபுறமும் சென்று மக்களை நோக்கிக் கரமசைத்து மகிழ்ச்சி தெரிவித்தார் அவர்.

## நீர் ஆதாரம்

- பூமியில் மொத்த மேற்பரப்பில் 1.41 பில்லியன் கியூபிக் மீட்டர் தண்ணீர் கொள்ளளவு உள்ளது. இந்தத் தண்ணீரைச் சமமாக எல்லாப் பகுதிக்கும் பகிர்ந்தளித்தால் 3,000 மீட்டர் ஆழத்திற்குள் பூமி அமிழ்ந்திருக்கும்.
- பூமியில் உள்ள தண்ணீரில் 98 சதவிகிதம் உப்புநீர், இரண்டு சதவிகிதம் மட்டுமே தூய்மையான நீராகும்.
- உலகில் 1.2 பில்லியன் மக்களுக்குத் தூய நீர் கிடைக்காமல் உள்ளது. உலக மக்கள் தொகையில் 4 சதவிகிதம் பேர் தினமும் 400 லிட்டர் நீர் உபயோகிக்கின்றனர். மூன்றில் இரண்டு பங்கு மக்கள் நாள் ஒன்றுக்கு 50 லிட்டருக்கும் குறைவான நீரையும், பெரும்பாலான மக்கள் 20 லிட்டர் நீரையும் பயன்படுத்துகின்றனர்.

நாகை காயிதேமில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். சாவர்க்கர் - மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா.முத்தையா அவர்கள் விழாத் தலைமை யேற்குமாறு முன்மொழிய, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.இரா.சம்பத் அவர்கள் அதை வழிமொழிய விழா தொடங்கியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு முதலமைச்சர் முதலான முக்கிய விருந்தினர்களுக்கெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் பொன்னாடை வழங்கிச் சிறப்பித்தார்.

அதன் பின்னர் ரூ.135 கோடி மதிப்பிலான அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாண்புமிகு முதல்மைச் சர்அவர்கள்தொடங்கிவைத்தார்;சில திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.



வாழ்த்துரைகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், நாகையில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைக்கவிருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவித்து காவல்துறைத் தலைவர் திரு. சு. ஸ்ரீபால் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

அதன்பின் தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகத் தலைவர் திரு.ஓ.எஸ். மணி, நாகப்பட்டினம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். கோடிமாரி ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம். சின்னசாமி வாழ்த்துரை வழங்கினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையுரையாற்றினார்.

இதன் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அதைத்தொடர்ந்து 54,000-க்கும் மேலான பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

உதவி பெறுவோரின் பட்டியலை, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.இரா. சம்பத் அவர்கள் படித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், நாகை காயிதேமில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் நாகூர், வேளாங்கண்ணி, அகோபிலமடம் ஆகிய திருத்தலங்களைச் சேர்ந்தவர்களும் மற்றும் பலரும் நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

விழா முடிவில், மாவட்ட ஆட்சித் தலைவர் நன்றியுரையாற்றினார்.

மகளிர் காவல் நிலையம்

அதற்குப் பிறகு-மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நாகையில், பழைய பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டிருந்த 'அனைத்து மகளிர் காவல் நிலையத்'தைத் திறந்து வைத்தார்.

அவ்விழாவில் காவல்துறைத் தலைவர் திரு. சு. ஸ்ரீபால், அவர்களும், காவல்துறை கூடுதல் தலைவர் திரு தேவாரம் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

இந்த விழாவிற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் வருகை தந்திருந்தார்கள்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**பி.எல். ராஜேந்திரன்**

# குற்றாலத்தில் குதூகலமான சாரல் திருவிழா

பொதிகை மலை அடிவாரத்தில், கடல் மட்டத்திற்கு மேல் 550 அடி உயரத்தில் 7.68 சதுர கி.மீ. பரப்பில் அமைந்துள்ள இயற்கை வளம் பொருந்திய பகுதிதான் திருக்குற்றாலம். தென்பாண்டி நாட்டில் இயற்கை அழகும், இறைவன் அருளும் ஒருங்கே அமையப் பெற்றது இந்த அழகிய குற்றாலம்.

கம்பீரமாக நிற்கும் மலை, அதில் ஓங்கி வளர்ந்துள்ள மரங்கள்; மலைகளில் பொங்கிவரும் அருவிகள்; அழகிய மலையைச்சுற்றி வந்து கொஞ்சும் மேகக் கூட்டங்கள்; மென்மையாக வீசும் தென்றல்; பூத்துக் குலுங்கும் பூவினம்; மந்திகளின் குறும்புகள்; ஓய்வு நாடியும், உடல் நலம் நாடியும் இங்கு வருவோருக்கு பன்னீரைத் தெளிப்பது போன்று வரவேற்கும் சாரல்; இங்கு வீசும் 'தென்றலுக்கு' என்றும் வயது பதினாறு!

பேரருவி, ஐந்தருவி, புலி அருவி, சிற்றருவி, செண்பகாதேவி அருவி, தேனருவி, பழைய குற்றால அருவி, பழத்தோட்ட அருவி, புது அருவி போன்ற அருவிகளில் நீராடும்போது சுற்றுலாப் பயணிகள் அடையும் சுகம்தான் என்ன! ஆண்டுதோறும் குற்றாலத்தில் ஜூன் முதல் செப்டம்பர் வரை சாரல் காலமாகும், சுற்றுலாப் பயணிகளின் நலம் கருதி, மாவட்ட நிர்வாகம், வசதிகளை விரிவான முறையில் செய்கின்றது.

ஆண்டுதோறும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்க அரசின் சார்பில் குற்றாலம் கலைவாணர் சாரல் திருவிழா நடத்தப்பட்டு வருகின்றது. 20.8.94 முதல் 28.8.94 முடிய அரசின் சார்பில் சாரல் திருவிழா மிகச்சிறப்பாக நடத்தப்பட்டது. தினமும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கலை நிகழ்ச்சிகளை மாவட்ட நிர்வாகமும், தஞ்சை தென்மண்டலப் பண்பாட்டு மையமும், சுற்றுலாத் துறையும் இணைந்து நடத்தின.

சாரல் திருவிழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட மாண்புமிகு தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்களையும், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு நாகூர்மீரான் அவர்களையும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும், சுற்றுலாத்துறை இயக்குநர், திரு குணாளன், இ.ஆ.ப., அவர்களையும், வருகைபுரிந்த சுற்றுலாப் பயணிகள் அனைவரையும், மாவட்ட ஆட்சித் தலைவர், திரு இரா. ஜெயராமன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

விழாவில், மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் அவர்கள் பேசுகையில், குற்றாலத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு. இங்கு வீசும் தென்றல் காற்றுக்கும் தனிச் சிறப்பு உண்டு. ஆனால், உல்லாசப் பயணிகள் குற்றாலம் வந்து குவிகிறார்கள் என்றார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர்மீரான் அவர்கள் பேசுகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சுற்றுலாத்துறைக்குச் சுற்றுலாத் தொழில் கொள்கையை வகுத்துள்ளார் என்றும், குற்றாலத்தில் ரூ.60 இலட்சம் செலவில் தமிழ்நாடு ஓட்டல் கட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நிதி வழங்கியுள்ளார்கள் என்றும், குற்றாலம், ஐந்தருவி, பழைய குற்றாலம் ஆகிய இடங்களில் உணவு விடுதிக் கூடங்கள் திறக்க அரசு பரிசீலனை செய்து வருகிறது என்றும் கூறினார்.

24.8.94 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு டி. ஜனார்த்தனம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தி கலைநிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார்.



26.8.94 அன்று, கோ-ஆப்டெக்ஸ் தலைவர் திரு. நெல்லை பாலாஜி அவர்கள், திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியப் பெருந்தலைவர் திரு. கே.ஆர்.பி. மணிமொழியன் ஆகியோர் கலந்துகொண்டுகுற்றாலத்தின் புகழினை விளக்கினார்கள்.

27.8.94 அன்று, மகளிர் தினமாகக் கொண்டாடப்பட்டது. இதில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் துணைவியார் திருமதி செல்வம் ஜெயராமன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் துணைவியார் திருமதி இளவேனில்ராஜேந்திரன் அவர்கள், குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி. அழகம்மாள் அவர்கள், மாவட்டச் சமூகநல அலுவலர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சாரல் திருவிழாவின் நிறைவு நாளில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. டி.எம்.செல்வகணபதி அவர்கள், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

விழாவைச் சிறப்பாக நடத்த உதவிய அனைவருக்கும், திருநெல்வேலி நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி நன்றி கூறினார்.

சாரல் திருவிழாவின்போது நடத்தப்பட்ட மெல்லிசை நிகழ்ச்சிகள், பரதநாட்டியம், நட்சத்திர இரவுகள், மாயாஜாலக் காட்சிகள் போன்ற நிகழ்ச்சிகளை நாள்தோறும் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளித்தனர்.

—எம்.பி. இராஜா

உதவி மக்கள் தொடர்பு அலுவலர், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்



# "குக்கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதே எம் இலட்சியம்"

## 23.9.1994 அன்று திண்டுக்கல் அண்ணா மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

**வீ**ரத்தின் விளை நிலமாக விளங்கி, விடுதலை உணர்வை வளர்த்த சான்றோர்கள் பலர் வாழ்ந்த பூமி, இந்த திண்டுக்கல் அண்ணா மாவட்டம். இந்துக்களும், முகமதியர்களும் உடன்பிறவாச் சகோதரர்களாக, மத நல்லிணக்கத்துடன் வாழும் மாவட்டத்திற்கு, வருகை தந்த என்னை, எழிச்சியோடு வரவேற்க வந்துள்ள, இலட்சக்கணக்கான மக்களைச் சந்திப்பதில், நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

திராவிட இயக்கத்தின் விடிவெள்ளி, பேரறிஞர் பெருந்தகை, திருப்பெயரை தாங்கிய மாவட்டம் இது. நம்மை வளர்த்துவிட்ட, நமது அரசியல் ஆசான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஒரு மாபெரும் மக்கள் இயக்கத்தைத் தொடங்கி வைத்து, மக்கள் பணி மேற்கொண்ட ஒரு காலகட்டத்தில் இடைத் தேர்தல் வெற்றி வாயிலாக, அரசியல் அங்கீகாரம் வழங்கி, தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்துக் காட்டிய இடம், இப்பகுதி.

அண்ணாவின் திருப்பெயரைத் தாங்கிய, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் இலட்சியங்களுக்கு, முதல் அரசியல் வடிவம் தந்த, இந்த மாவட்டத்திற்கு வருகை தரும்போதெல்லாம், என்னை அறியாமல், எனக்கு ஒரு புதிய தெம்பு ஏற்படுவதாக, நான் உணர்கிறேன்.

இப்பகுதியின் வீர உணர்விற்கும், தொன்மைக்கும், ஒரு சான்றாக விளங்கிக் கொண்டிருக்கும், மலைக்கோட்டை, 1605-ஆம் ஆண்டு, முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் என்பவரால் கட்டிமுடிக்கப் பட்டதாக வரலாறு கூறுகிறது. அவர்கள் வழி வந்த ராணி மங்கம்மா, இந்த மலைக் கோட்டைக்கு, 600 படிகளை



வெட்டிவைத்ததாகவும், சரித்திர ஏடுகள் தெரிவிக்கின்றன.

*1755*-ஆம் ஆண்டு, அன்றைய மைசூர் சமஸ்தானம் Hyder Ali-ஐ திண்டுக்கல்லுக்குக் கவர்னராக நியமித்தது.

அப்போது திண்டுக்கல் பகுதியும் சேர்த்து கோலோச்சிய, சிவகங்கைச் சீமையின் அரசி, வீரமங்கை வேலுநாச்சியாரைப் பற்றி குறிப்பிடாவிட்டால், எனது பணி நிறைவு பெறாது என்பதை நான் நன்கு அறிவேன்.

*1772*-ஆம் ஆண்டு சிவகங்கை மன்னர்,முத்துவடுகநாத பெரிய உடையாத்தேவர் காளையர் கோயில், காளகேசன் கோவிலில் தெய்வ தரிசனம் செய்து கொண்டிருந்த போது, ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். ராணி வேலுநாச்சியார், திண்டுக்கல்லக்கு வந்து, Hyder Ali-யின் ஆதரவு பெற்று, திண்டுக்கல் கோட்டையிலும், விருப்பாச்சிக் கோட்டையிலும், எட்டு ஆண்டுகள் வாழ்ந்து, ஆங்கில ஏகாதிபத்தியத்தை விரட்டி அடித்தார். தான் ஏற்றுக் கொண்ட சபதத்தை நிறைவேற்றி சிவகங்கைச் சீமையை மீட்டு, தமிழ்ச் சமுதாயத்தின் பெருமையை நிலைநாட்டியவர் வேலு நாச்சியார்.

வடக்கே ஜான்சி ராணி, ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்து, முதல் சுதந்திரப் போரில் குரல் கொடுத்ததற்கு, அரையாண்டுக்கு முன்பே தெற்கே இந்த மண்ணில், ஒரு தமிழச்சி வாள் ஏந்திக் களம் புகுந்து, பகைவரை வெட்டி வீழ்த்தி ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய எண்ணங்களுக்குச் சமாதி வைத்தார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, மனதில் ஒரு புதிய எழுச்சி தோன்றுகிறது. தமிழ் நங்கையரின் வீரத்தைப் பறை








சாற்றும் வண்ணம், இழந்த சிவகங்கைச் சீமையை மீட்டு, மீண்டும் பத்தாண்டுக் காலத்திற்கு நல்லாட்சி புரிந்த வேலுநாச்சியார் இன்றும் தமிழக மக்களின் வீரத்திற்கும், ஆற்றலுக்கும் ஒரு வாலாற்றுச் சான்றாக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

இந்த நூற்றாண்டில், சுதந்திரக் கனலை மக்களிடையே ஊட்டிய, அதில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட தியாகி சுப்பிரமணிய சிவா, இம் மாவட்டத்தைச் சேர்ந்த வத்தலகுண்டில் பிறந்தவர் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நமது மனதில், தேச பக்தி உணர்வு, மிகுதியாகின்றது. பாரதியாரால் புகழப்பட்ட சிவா, கப்பலோட்டிய வ.உ. சிதம்பரனாருக்கு உதவியாக இருந்து, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தையும், அடக்கு முறையையும் எதிர்த்து தேசிய உணர்வை வளர்த்ததை, சரித்திரம் என்றென்றும் மறக்காது.

மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிவகுக்கும் அதே நேரத்தில், மாவட்டங்களின் இணையான வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு அந்தந்த மாவட்டத்தின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப, பல திட்டங்களைத் தீட்டி முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. அதே உணர்வுடன், இந்தத் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திற்கு உங்கள் அன்புச் சகோதரி 153 கோடி ரூபாய்க்கான திட்டங்களுடன், உங்களைக் காண வந்துள்ளேன். இன்று, 78 கோடி ரூபாய் செலவில், முடித்து வைக்கப்பட்ட திட்டங்களைத் துவக்கி வைத்ததிலும், 58 கோடி ரூபாய் மதிப்பில், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 54,000 பேருக்கும் அதிகமான, இம்மாவட்ட வாழ் மக்களுக்கு, 17 கோடி ரூபாய் செலவில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்பட உள்ளதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாவட்டத்தின் மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருப்பது, குடிநீர்ப் பிரச்சினை என்பதை அறிந்த உங்கள் அன்புச் சகோதரியின் அரசு அதற்குத் தீர்வு காண, கடந்த மூன்று ஆண்டுகளில், பல்வேறு குடிநீர்த் திட்டங்களைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகின்றது. தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள குக்கிராமக்களுக்குக் 'கூட, பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்க வேண்டும் என்பதே எங்கள் இலட்சியம். நாங்கள் செய்து முடித்த பணிகள் ஏராளமாக இருந்தாலும் இன்னும் திட்டமிட்டு, நாங்கள் செயல்படுத்த வேண்டிய பணிகளும், நிறையவே உள்ளன. எப்பாடுபட்டாகிலும் அவற்றைச் செயல்படுத்தி இம் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க நான் உறுதி கொண்டுள்ளேன்.

குடிநீர்த் திட்டங்களையும், நீர்ப்பாசனத் திட்டங்களையும், பரிசீலனை செய்து ஒப்புதல் அளிப்பதற்கு அரசாங்கம் சில வரைமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்றது. செலவு பயன் விகிதாச்சாரம், அதாவது Cost Benefit Ratio அடிப்படையில், செலவு அளவிற்குப் பயன் இருக்கிறது என்பதைக் கண்டறிந்த பிறகு தான், இத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படுகின்றது. இத்தகைய "இறுக்கமான விதிமுறைகளினால்", திண்டுக்கல் போன்ற பகுதிகளில், பல குடிநீர்த் திட்டங்களும், நீர்ப்பாசனனத் திட்டங்களும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, செலவு பயன் விகிதாச்சாரத்தின்படி ஏற்புடையது அல்ல என்று நிராகரிக்கப்பட்டுள்ளன. "விதிகளின் அடிப்படையில், திட்டப் பணிகளைச் செயல்படுத்துவது நல்லது" என்கின்ற அதே நேரத்தில் மக்களுக்கு நன்மை செய்கின்ற பணியில், இந்த Cost Benefit Ratio அதாவது செலவு பயன விகிதாச்சாரம் என்கின்ற விதி இடையூறாக இருக்கக் கூடாது என்பதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கின்றோம். எனவே இன்றுமுதல் வறட்சிப் பகுதிகளுக்கும் நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்துவிட்ட பகுதிகளுக்கும் இந்த இறுக்கமான விதிமுறைகள் சற்று தளர்த்தப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தைப் பொருத்தவரையில், நிலத்தடி நீர், கடுமையாகக் குறைந்துள்ள பகுதிகளுக்கு, இந்த அறிவிப்பு, ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று உறுதியாக நம்புகின்றேன்.

பல காலமாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள குடிநீர்த் திட்டங்களும், நீர்ப்பாசனத் திட்டங்களும்

எனது புதிய ஆணைப்படி, மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். "மக்கள் தான் இறுதி எஜமானர்கள்", என்ற ஜனநாயகக் கோட்பாட்டில், நாங்கள் வைத்துள்ளூ ஆழமான நம்பிக்கைக்கு, இந்த அறிவிப்பு, ஒரு உண்மையான சாட்சி.

சின்னாளப்பட்டி, நகரின் குடிநீர்த் தேவை, வளர்ந்து வருகின்ற அதேநேரத்தில் கிடைக்கின்ற நிலத்தடி நீரும், குடிப்பதற்கு உகந்ததாக இல்லை என்கின்ற சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினால் இன்று, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, வைகை ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு, ஒரு குடிநீர்த் திட்டத்தைத் தீட்டியுள்ளது.

சின்னாளப்பட்டிப் பேரூராட்சிப் பகுதிவாழ் மக்களுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் நாள் ஒன்றுக்கு, 15 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், 9 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில், வெகுவிரைவில் செயல்படுத்தப்படும் என்பதை, மிகமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 16 இலட்சம் ரூபாய் மட்டுமே, ஆண்டு வருமானம் கிடைக்கின்ற சின்னாளப்பட்டி பேரூராட்சியால், இத்தனைப் பெரிய திட்டத்தைச் செயல்படுத்த நிதி ஆதாரத்தைத் திரட்ட முடியாது என்கின்ற சூழ்நிலையில் உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, எப்பாடுபட்டாகிலும், இந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றியே தீரும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாடிக்கொம்பு, அகரம், எரியோடு, வேடசந்தூர், கூட்டுக் குடிநீர்த் திட்டம் வத்தலகுண்டுப் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், நூதுளாபுரம், கரிசல்பட்டி குடிநீர்த் திட்டம், மன்னவனூர் குடிநீர்த் திட்டம், காசாம்பட்டி குடிநீர்த் திட்டம் போன்ற பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் நான் இப்போது வழங்கியுள்ள, புதிய வரைமுறைகளின்படி, மறு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களைப் பொருத்தவரையில் குடிநீர்த் திட்டங்களை, எவ்வளவு விரைவில் செயல்படுத்த முடியுமோ, அவ்வளவு விரைவில் செயல்படுத்தப்படும் என்பதில் தீவிரமாக இருக்கின்றோம். வெள்ளோடு கிராமத்தில் ஆனைவிழுந்தான் ஓடையின் குறுக்கே ஏரி அமைத்தல், கன்னிவாடி கிராமத்தில் நாயோடைக் குறுக்கே புதிய ஏரி கட்டுதல், நல்லதங்காள் ஓடை குறுக்கே, ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டுதல், ராஜதானிக் கோட்டை அருகே, சிறுமலை அருவிக்குக் குறுக்கே ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டுதல், காவல்பட்டிக் கிராமத்திற்கு அருகில், பச்சையாறு குறுக்கே, நீர்த் தேக்கம் கட்டுதல் போன்ற திட்டங்கள் மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



வேடசந்தூர் வட்டம், ராமகிரி கிராமத்தில் அமைந்துள்ள, ராமகிரி ஏரியை மீண்டும் புதிதாக அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இப்பகுதி வாழ் மக்கள் மத்தியில் நீண்டகாலமாக இருந்து வருவதை நான் நன்கு அறிவேன். 1993-ஆம் ஆண்டு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்களை நான் இப்பகுதிக்கு அனுப்பி வைத்து பார்வையிடச் செய்தேன். அதன் விளைவாக, ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டுக்கல் நகரைப் பொருத்தவரையில், குடிநீர் வழங்கும் திட்டம், செவ்வனே செயல்படுத்தப்பட்டு, போதிய அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், முறையான ஒரு பாதாள சாக்கடைத் திட்டம், இல்லாத சூழ்நிலையில், இந்த நகரின் அரண்மனைக் குளம் மற்றும் பல பகுதிகளில், கழிவு நீர்ப் பெருக்கம் ஏற்பட்டு சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்டு வருகின்றது. எனவே, இந்த நகரத்தின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க, கழிவு நீர்ப் பாதாளச் சாக்கடைத் திட்டம்

Underground Drainage Scheme ஒன்று, 28 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய நிதி ஆதாரம், இந் நகராட்சியிடம் இல்லாத காரணத்தினால், அவற்றை எவ்வாறு ஏற்பாடு செய்வது, என்பது குறித்து நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். வெகுவிரைவில், இத்திட்டத்திற்குச் செயல் வடிவம் தரப்படும். இந்த நகரத்தின் பல பிரச்சினைகள் இதனால் தீரும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாவட்டத்தின் சுற்றுலா மையமான, கொடைக்கானலில் அனைத்து வசதிகளோடு கூடிய ஒரு பேருந்து நிலையம் இல்லாதது ஒரு குறையாக உள்ளது. சென்ற முறை நான் கொடைக்கானல் வந்திருந்தபோது, அதிகாரிகளோடு பேசும்போது, கொடைக்கானலில் ஒரு புதிய பேருந்து நிலையத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டேன். அதன்படி 30 இலட்சம் ரூபாய் செலவில் அதற்காக ஒரு திட்டம் தீட்டப்பட்டது. ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம், மற்றும் கொடைக்கானல் நகராட்சி ஆகிய இரண்டும் இணைந்து, இந்தப் பணியை விரைவில் செய்து முடித்துக் கொடுக்க வேண்டும் என நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சிதான் கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படை என்ற கொள்கையில் நாங்கள் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு, மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறோம். இம்மாவட்டத்தின் பல்வேறு திட்டங்களில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை, அமைத்துத் தரும் வகையில் மொத்தம் 25 கோடி ரூபாய் மதிப்புள்ள, பல்வேறு பள்ளிக் கட்டடங்கள், சத்துணவு மையங்கள்,



"கடலுக்காக அல்ல, கடற்கரையிலே இருக்கின்ற மக்களுக்காக காற்றடிக்கின்றது. விளக்கு ஏற்றினால் தன் எதிரிலே இருக்கின்ற இருட்டைப் போக்க ஒளி பயன்படுமே தவிர, அதனடியில் இருக்கின்ற நிழலைப் போக்க முடியாது! அதுபோல, நம்மிடத்திலே இருக்கின்ற திறமை நமக்காக அல்ல, நாட்டு மக்களுக்காக–அந்த மக்களுக்காக. அந்த வகையில் நாம் ஒவ்வொருவரும் பணியாற்றுவோம்!"

சமுதாயக் கூடங்கள், இணைப்புச் சாலைகள், பாலங்கள், சிறு பாசனத் திட்டங்கள், குடிநீர்த் திட்டங்கள், தொகுப்பு வீடுகள் ஆகியவற்றைப் பொதுமக்களின் நலனிற்கு அர்ப்பணித்ததில் நான் மிக்க மனநிறைவு அடைகின்றேன்.

இம்மாவட்டத்தின் போக்குவரத்து வசதியை மேம்படுத்த, 10 புதிய வழித்தடங்களை இன்று துவக்கி வைத்துள்ளேன். மேலும், ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள, ராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின், தலைமை அலுவலகக் கட்டடத்தையும் திறந்து வைத்ததில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வேளாண் பொறியியல் துறை, 4 கோடி ரூபாய் மதிப்பில், சில திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில், பல்வேறு நீர்ப் பராமரிப்புப் பணிகள் உட்பட, இத்திட்டங்களைத் துவக்கி வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பழனி நகரத்தின் சுகாதார மேம்பாட்டிற்காக, 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பில், நிர்மாணிக்கப்பட்டுள்ள, பாதாளச் சாக்கடைப் பணி Underground DrainageScheme இன்று என்னால் துவக்கிவைக்கப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும், இலட்சக்கணக்கான இறையன்பர்கள் வருகை தரும் அறுபடை வீடுகளில் ஒன்றான இந்தப் பழனி நகரின், சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தவும் நிறைவான தோற்றத்தை வழங்கவும் இந்தத் திட்டம் உதவும் என்றும் நான் பரிபூரணமாக நம்புகின்றேன்.

அதேபோன்று, திண்டுக்கல், கொடைக்கானல் ஆகிய இரண்டு முக்கிய நகரங்களிலும், சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய சாலை வசதிகள், மற்றும் குடிநீர் வசதிகள் ஆகியவை, வளர்ந்து வரும் இந்நகரங்களில், பெருகி வரும் மக்கள் பெருக்கத்தின் தேவைகளை, நிறைவு செய்யும் வகையில், அமைந்திடும் என்று நான் கருதுகின்றேன். குறிப்பாக, கொடைக்கானலில் நிறைவேற்றப்பட்டிருக்கும் எழிலார்ந்த ஏரி அபிவிருத்தித் திட்டம், அந்த ஏரிக்கு மென்மேலும் அழகு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

ராமநாயக்கன்பட்டி, முன்னிலைக்கோட்டை, வேலான் கோட்டை ஆகிய கிராமங்கள் உள்ளிட்ட, 9 கிராமங்களில், சுமார் 35 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகளை, நான் இன்று துவக்கி வைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

குடிநீர் வசதி மேம்பாட்டு வசதிகளைப் பொருத்த வரையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, சுமார் 40 இலட்சம் ரூபாய் செலவில், வீரசின்னம்பட்டி, கோனூர் உட்பட ஆறு கிராமங்களில், புதிய மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகள்

கட்டப்படும். திண்டுக்கல் நகராட்சிப் பகுதியில் இதுவரை குடிநீர் வழங்கப்படாத பகுதிகளுக்குரிய, புதிய குடிநீர் விநியோகம் அபிவிருத்தித் திட்டம், 40 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும், 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிமுடிக்கப்பட்டு, இன்று என்னால் துவக்கிவைக்கப்பட்ட, சேவகம்பட்டி பேரூராட்சி குடிநீர் விநியோகம் அபிவிருத்தித் திட்டம் இப்பகுதி வாழ் மக்களின் குடிநீர்த் தேவைகளைப் பெரிதும் பூர்த்தி செய்யும் என்று நம்புகின்றேன்.

10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, அழகாபுரி, குடகனாறு நீர்த் தேக்கத்தைத் திறந்து வைத்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன். இம்மாவட்டத்தின் வேளாண் விளைபொருள் பெருக்கத்திற்கு, இது வழிவகுக்கும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

அடுத்து, கிராம மக்களின் சுகாதார, மற்றும் நல்வாழ்வு முன்னேற்றத்தைப் பொருத்தவரையில் எங்கள் அரசு மிகுந்த அக்கறை செலுத்திவருகிறது. நவீன மருத்துவ வசதிகள், கிராம மக்களுக்குக் கிடைக்கப்பெற வேண்டும் என்பதற்காக, பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றோம். இந்த வகையில், ஆலமரத்துப்பட்டி, நரசிங்காபுரம், எரியோடு, ஆகிய மூன்று கிராமங்களில், ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்களையும் நிலக்கோட்டை அரசு மருத்துவமனையில், புதிய அறுவை சிகிச்சைப் பகுதிக் கட்டடத்தையும் இப்பகுதி வாழ் மக்களின் நலனுக்காக, இன்று அர்ப்பணித்துள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.



ஏழைகளுக்குத் தொண்டு புரிவதே என் உள்ளத்தில் குடிகொண்டிருந்த பெரும் விருப்பமாகும். இவ்விருப்பமே என்னை எப்போதும் ஏழைகளிடையில் போய்ச் சேர்த்தது. ஏழைகளுடன் கலந்து அவர்களில் ஒருவனாகும் ஆற்றலையும் எனக்குத் தந்தது.

சின்னாளப்பட்டியில் புதிய காவல் நிலையம், கொடைக்கானலில் புதிய போக்குவரத்துக் காவல் நியைலம், ஆயுதப் படைக்குக் கூடுதலாக இரு புதிய அணிகள் என்று, இம்மாவட்டத்தின் காவல் துறையை மேலும் வலுப்படுத்த, சில திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்நாட்டின் முக்கியத் திருத்தலங்களில் ஒன்றான பழனியில், பெருகி வரும் இறையன்பர்களின் எண்ணிக்கை கூடி வரும் போக்குவரத்து ஆகியவை, அதன் பேருந்து நிலைய விரிவாக்கத்தின் தேவையை வெகுகாலமாகவே ஏற்படுத்தி வந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பில், பழனி நகரில் அனைத்து வசதிகளுடன், ஒரு புதிய பேருந்து நிலையம் விரைவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில், திண்டுக்கல், பழனி, ஆகிய நகரங்களில் சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பில் 395 புதிய குடியிருப்பு வீடுகளைக் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திண்டுக்கல் புகைவண்டி நிலையத்திற்கு அருகில், ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டப்படாததால், போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டு, பொதுமக்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்பட்டு வருகின்றன. இதைத் தீர்க்க 3 கோடி ரூபாய் செலவில் இரயில்வே மேம்பாலம் ஒன்று கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தில் இன்றைய தினம் சுமார் 29 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு மின் வளர்ச்சித் திட்டங்களுக்கான, அடிக்கல்லை நாட்டியதில், நான் பேருவகை கொள்கின்றேன். செம்பட்டியில் 15 கோடி ரூபாய் செலவிலும், கன்னிவாடி, சித்தர்கள் நத்தம், எரியோடு ஆகிய இடங்களில் 8 கோடி ரூபாய் செலவிலும் துணை மின்நிலையங்கள் உருவாக்கப்படும். வேடசந்தூர் துணை மின் நிலையம், 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட, துணை மின் நிலையமாக உயர்த்தப்படும்.

சமுதாயத்தில் உள்ள தனி மனிதர்களும், சமுதாயத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு ஏற்ப வளர்ச்சி அடைய வேண்டும் என்கின்ற கருத்தை நான் பல இடங்களில் வலியுறுத்தி வருகின்றேன். இதன் வெளிப்பாடாகத்தான் நான் சொல்கின்ற எல்லா மாவட்டங்களிலும், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு, அரசின் பல்வேறு திட்ட உதவிகள் வழங்கி மகிழ்ச்சி அடைகின்றேன்.

அந்த வகையில் 54,000 பேருக்கும் மேற்பட்ட, இம்மாவட்ட வாழ் மக்களுக்கு, 17 கோடி ரூபாய் செலவில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள், வழங்கப்பட உள்ளன.

என் அன்பிற்குரிய மக்கள் அனைவரையும், இந்த மேடைக்கு வரவழைத்து எனது கரங்

களாலேயே, இந்த உதவிகளை வழங்க நான் பெரிதும் விரும்புகின்றேன். நேரமின்மையைக் கருதி ஒரு சிலருக்கு மட்டும், இந்த விழா மேடையில் நான் உதவிகளை வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பயனாளிகள் இருக்கின்ற இடத்திற்குச் சென்று, நலத் திட்ட உதவிகளை வழங்குவார்கள் என்று மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்றவர்கள், அதனை ஒரு அடிப்படையான ஆதாரமாகக் கொண்டு தங்களது உழைப்பை நல்கி பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்று, வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் முயற்சிகள் அனைத்தும், வெற்றி அடைய வேண்டும் என்ற, எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்த, பெண்களின் பிரச்சினைகளுக்குச் சட்டரீதியான தீர்வைக் காணவும், பல்வேறு சமுதாயக் கொடுமைகளிலிருந்து, அவர்களைக் காப்பாற்றவும், தனி ஒரு அமைப்பை ஏற்படுத்தித் தர வேண்டும், என்ற எனது எண்ணத்தின் பிரதிபலிப்புத் தான் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள். ஆரம்பத்தில், இது நடக்கின்ற காரியமா? என்று கேள்வி கேட்டவர்களும் உண்டு. நடக்காது என்று சாதித்தவர்களும் உண்டு. கற்பனையில் வாழ்ந்தவர்கள் என்று நம்மை பரிகசித்தவர்களும் உண்டு. ஆனால், இன்று நாம், அதைச் சாதித்துக் காட்டியிருக்கின்றோம். இதை முடியும் என்று நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம். இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களால், தமிழகத்திற்கு மகளிர் ஒரு புதிய தன்னம்பிக்கையையும், சட்டப் பாதுகாப்பையும் பெற்றிருக்கிறார்கள் என்பது, கண்கூடு. இந்த விஷயத்தில் நம் இந்தியத் துணைக் கண்டத்தில், மற்ற மாநிலங்களுக்கும் மட்டும் அல்லாது உலக நாடுகளுக்கே, முன்னோடியாக இருந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல் கட்டமாக 27 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஆரம்பிக்கலாம் என்று, நாங்கள் திட்டமிட்டோம். மேலும் சில கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதால் முதல் கட்ட அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது.

எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, கூடுதலாக அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்த, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று உறுதி கூறுகின்றேன்.

இன்னும் சிறிது நேரத்திற்குப் பிறகு, திண்டுக்கல் நகரத்தில், நான் திறந்துவைக்க உள்ள "அனைத்து மகளிர் காவல் நிலையம்'', தமிழகத்தின் 31-வது அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆகும்.

ஒரு காவல் மாவட்டத்திற்கு குறைந்தது ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தையாவது, இந்த முதல் கட்டத்தில் ஏற்படுத்திக் கொடுத்ததை நினைத்து என் மனம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.

இந்த மாவட்டம், தனது சொந்த மாவட்டமாக இல்லை என்றாலும், தனது சொந்த மாவட்டமாகக் கருதி, இந்த விழாவை இத்தனைச் சீரோடும் சிறப்போடும் ஏற்பாடு செய்த, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு எஸ். கண்ணப்பன் அவர்களுக்கு, எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நெஞ்சார்ந்த நன்றியையும், உரித்தாக்கிக் கொள்கிறேன். இந்தச் சீரிய பணியில் அவருடன் ஒத்துழைத்துப் பணியாற்றிய, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் அன்புச்



## கோழி வளர்ப்பு

கிராமப் பகுதிகளில் குடிசைத் தொழிலாக, ஏராளமான பேருக்கு வேலைவாய்ப்பை அளிப்பது கோழி வளர்ப்புத் தொழில். நடப்பு நிதியாண்டில் *2,61,303* முட்டைகள் உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. அதே போன்று *1993-94*-இல் சராசரி தனிநபர் முட்டை நுகர்வு ஆண்டுக்கு 27-ஆக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. முட்டை உற்பத்தியைப் பெருக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கோழிப் பண்ணைகள் வைத்திருப்பவர்களுக்குத் தரமான கோழி இனங்கள் கிடைப்பதை அதிகரிப்பது, கோழியின மேம்பாட்டுக்கெனத் தேசிய அளவில் உயர்மட்ட அமைப்பை ஏற்படுத்துவது, கோழியின வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பயிற்சி வசதியை ஏற்படுத்துவது கோழியின வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோரை ஊக்குவிக்கும் வகையில் கோழியின யூனிட்டுகள் அமைப்பைக் கூட்டுறவு அடிப்படையில் உருவாக்குவது, கோழியினப் பொருட்கள் உற்பத்தியைப் பெருக்கத் தேவையான ஊக்கத்தை அளிப்பது போன்றவையே அந்த நடவடிக்கைகள்.

சகோதரர் திரு எஸ். ரகுபதி அவர்களுக்கும், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு வி. சத்தியமூர்த்தி அவர்களுக்கும், மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத்துணைத்தலைவர் மற்றும் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ்.காந்திராஜன் அவர்களுக்கும், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர், திரு சி. சீனிவாசன் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும், பாராட்டுதல் களைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

தமிழகத்தின் 23 மாவட்டங் களுக்கும், நானே நேரிடையாகச் சென்று அரசின் நலத்திட்ட உதவி களை வழங்கி, முடிக்கப்பட்ட பல திட்டங்களைத் துவக்கி வைத்தும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் வந்துள்ளேன். திண்டுக் கல் அண்ணா மாவட்டம், இந்தச் சுற்றில் கடைசி மாவட்டம் ஆகும். தமிழகத்தின் அனைத்து மாவட் டங்களுக்கும், நானே நேரில் சென்று மாவட்ட வாழ் மக்களின் பிரச்சினைகளை, அலசி ஆராய்ந்து மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, பல்வேறு பணிகளை மேற் கொண்டதை நான் ஒரு வேள்வி யாக நடத்திக் காட்டியுள்ளேன்.

அரசியல் மனமாச்சரியங்களுக் காக, நான் செய்வதையெல்லாம் குறை கூறுபவர்கள், இதிலும் குறை கூறத்தான் செய்கிறார்கள். என்னைப் பொருத்தவரையில் குறை கூறுபவர்களைப் பற்றி நாம் கவலைப்படக் கூடாது மக்களின் குறைகளைக் கலை வதையே நமது கொள்கையாகக் கொள்ளவேண்டும்.

நாம் மேற்கொண்ட புனிதப் பணியில் மற்றவர்களின் குறை சொற்கள் நமது மக்கள் பணியை மேலும் வலுப்படுத்துகின்ற ஒரு உரமாகத்தான் அமையுமே தவிர, அனல் மீது விழும் நீரைப் போல, நமது வேக்கைத் தணித்துவிடாது.

அந்த வகையில், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, கடந்த மூன்றாண்டுக் காலத்தில், பல மாவட்டங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலமுறை சென்றிருந் தாலும், 23 மாவட்டங்களுக்கு, குறைந்தபட்சம் ஒரு முறையாவது செல்கின்ற பணியையும், இன்று இந்த இடத்தில் முடித்து வைக் கின்றேன் என்பதை எண்ணும் போது பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளுக்கு ஒரு வடிவத்தை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் எந்த இடத்தில் கொடுத் தாரோ அதே இடத்தில், அவரது இலட்சியங்களுக்கு கனவுகளுக்கும், நான் ஒரு புதிய பொலிவைச் சேர்த்துள்ளேன் என்பதை எண் ணிப் பெருமகிழ்ச்சி அடை கின்றேன்.

நான் செல்லுகின்ற இடங்களி லெல்லாம், நீங்கள் அளித்த வரவேற்பையும், உங்கள் அன்பை யும், பாசத்தையும் கண்டு, மனம் நெகிழ்ந்து நிற்கின்றேன். நீங்கள் அனைவரும் பல்லாண்டு பல் லாண்டுக் காலம் அனைத்து வளங்களும், நலங்களும் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற, எனது நெஞ்சத்து நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தொழுநோய்

உலகம் முழுவதும் 3.5 மில்லியன் பேர் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியாவில் உள்ளனர். இந்தியாவில் 201 மாவட்டங்களில் 1,000 பேரில் ஐந்து பேருக்கும் 77 மாவட்டங்களில் 100 பேரில் இரண்டு முதல் மூன்று பேருக்கும் தொழுநோய் பாதிப்பு உள்ளது. தொழுநோய் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளில் கூட்டு மருந்துச் சிகிச்சை முறை படிப்படியாக விரிவாக்கப்பட்டு வருகிறது. இதுவரை 135 மாவட்டங்களைச் சேர்ந்த 27.5 கோடி ம்க்களுக்கு இச் சிகிச்சையின் பலன் கிட்டியுள்ளது. 62 மாவட்டங்களுக்கு இச்சிகிச்சை முறை தற்போது விரிவாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாகக் கூட்டு மருந்துச் சிகிச்சை மூலம் தொழுநோய் ஒழிப்பில் நல்ல பலன் காணப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் 1,10,000 பேர் இச்சிகிச்சையின் மூலம் குணமடைந்துள்ளனர்.

நாடு முழுவதும் சுமார் 285 தொண்டு நிறுவனங்கள் தொழுநோய் ஒழிப்பில் ஈடுபட்டுள்ளன. 49 தொழுநோய்ப் பயிற்சி நிலையங்களில் டாக்டர்களுக்குத் தொழு நோய் பற்றிய அடிப்படைப் பயிற்சி அளிக் கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 25,000 தொழில்நுட்பப் பணியிடங்கள் உரு வாக்கப்பட்டுள்ளன. தொழுநோய்ப் பாதிப்பு அதிகம் உள்ள தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், குஜராத், மகாராஷ் டிரா மாநிலங்கள், புதுச்சேரி மற்றும் இலட்சத்தீவு யூனியன் பிரதேசங்களில் கூட்டுமருந்துச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இரண்டாயிரமாவது ஆண்டுக்குள் தொழு நோயை முற்றிலுமாக ஒழித்துவிட மத்திய அரசு நாடு முழுவதும் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தைத் துவக்கியுள்ளது.

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

## செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

## உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.

### சிறப்பு அம்சங்கள்

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி

**ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை**

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

**2%**

சிறப்பு ஊக்கத்தொகை.





தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு

**ஆணையர்,**

சென்னை மாநகராட்சி (சி.சே.பிரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

*இயக்குநர், சிறு சேமிப்புத் துறை*

*சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,*
*சென்னை - 600 006.*
*தொலைபேசி: 8251784/8251685.*

DIPR/519/TIS/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



திருப்பதி-திருமலை

# தங்கத் தேரோட்டம்!

**த**மிழ்நாடு அரசின் ஓர் அங்கமாம் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகமான 'பூம்புகார்' இங்கே மட்டுமன்றிப் பிற மாநிலங்களிலும் தமது புகழ்க்கொடி நாட்டிவருகிறது.

சென்ற 30.9.94 வெள்ளியன்று திருப்பதியில் உள்ள அருள்மிகு வெங்கடேசுவரர் திருக்கோயிலுக்கு ரூ.2.50 கோடி செலவில் சிறப்புறச் செய்யப்பட்ட தங்கத் தேர், இக் கழகம் மூலம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக ஊரகத் தொழில்துறை அமைச்சர்- திரு. துரை இராமசாமி அவர்களும், தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்களும் கலந்துகொண்டனர்.

அவர்களோடு- திருப்பதி தேவஸ்தானத் தலைவர் செங்கல்ரெட்டி, நிர்வாக அதிகாரி மூர்த்தி, திருப்பதி இராமானுஜ பெரிய ஜீயர் சுவாமிகள், 'போர்டு' உறுப்பினர்களான திரு. டிடி. வாசு, திரு. வெங்கடராம ரெட்டி, தமிழ்நாடு அரசின் கைத்தறி கைவினைப் பொருள்கள் துறைச் செயலர் திரு. குப்தா ஆகியோரும் பங்கேற்றுத் தங்கரதத்தின் வெள்ளோட்டத்தை வடம்பிடித்து இழுத்துத் தொடங்கிவைத்தார்கள்.

அன்று காலை 9.30 மணியளவில், கோயிலின் முக்கிய நுழைவு வாயில் முன் தொடங்கிய இந்தத் தேரோட்டம்- கோயிலைச் சுற்றியுள்ள நான்கு மாடவீதிகளிலும் நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள் வீதியின் இருமருங்கிலும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு நின்று வியப்போடு கண்டு ரசித்துத் தரிசித்தார்கள்.

### தேர் பற்றிய விவரம்

இந்தத் தேர், இதுவரை தமிழ்நாட்டில் செய்யப்பட்ட 8 தங்கத் தேர்களில் உயரமானது ஆகும்.

26 அடி 6 அங்குலம் உயரமுடைய இத் தங்கத் தேர், இரண்டாண்டுகளில் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. இதைச் செய்திட 27.922 கிலோ தங்கமும், 780.700 கிலோ செப்புத் தகடும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான தங்கத்தைத் திருப்பதி திருமலை தேவஸ்தானமே வழங்கியிருக்கிறது.

'பூம்புகார்' அமைப்பின் மூலம் இதேபோல் தமிழகத்தைச் சேர்ந்த அருள்மிகு மாங்காடு காமாட்சியம்மன் திருக்கோயில், திருவண்ணாமலையில் உள்ள அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில், இராமேசுவரம் கோயில், சிவன்மலை கோயில் உள்ளிட்ட 10 திருக்கோயில்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள்







உத்தரவின்பேரில் தங்கரதங்கள் செய்தளிக்கப்படவிருக்கின்றன.

மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கும், மருதமலை அருள்மிகு முருகப்பெருமான் திருக்கோயிலுக்கும் மரத்தேர் செய்யப்பட்டுள்ளது.

**சிற்ப விற்பன்னர்கள்**

மதுரையைச் சேர்ந்தவரான ஸ்தபதி திரு. முத்துக்குமாரசாமி தலைமையில் 57 சிற்ப விற்பன்னர்கள் இரவு பகலாகப் பாடுபட்டு இந்த எழில்மிகு ரதத்தைத் தமிழ்நாட்டுக் கலையுலகுக்குப் பெருமை கூட்டும் வகையில் செய்து முடித்திருக்கிறார்கள்.

பத்திரிகையாளர் சந்திப்பின்போது- தலைமை ஸ்தபதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பரிசு அளித்துப் பாராட்டினார்.

மேலும்- அக்குழுவினரில் சிறப்பாகப் பணிபுரிந்த திரு. அலாவுதீன், திரு. உசேன் முதலான ஐவருக்கும் கைத்தறி ஆடைகளும், ரொக்கப் பரிசும் அளித்தார்.

**பத்திரிகையாளர் சந்திப்பு**

திருப்பதி திருமலை தேரோட்டத்தின் பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்த மாண்புமிகு தமிழ்நாடு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. துரை இராமசாமி அவர்கள் தெரிவித்ததாவது:

"பூம்புகார் அமைப்பிற்குத் தமிழகத்தில் உள்ள மாவட்டத் தலைநகர்களில் மட்டுமல்லாமல் வேறு மாநிலங்களைச் சேர்ந்த திருப்பதி, பெங்களூர், கல்கத்தா, புதுடில்லி போன்ற நகர்களிலுமாகப் பத்தொன்பது விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. இக் கழகம் 1993 -94- இல், ரூ.800 இலட்சம் விற்பனையையும், ரூ.160 இலட்சங்கள் உற்பத்தியையும் அடைந்துள்ளது. வருகிற ஆண்டில் ரூ.900 இலட்சம் அளவில் விற்பனையும், ரூ.160 இலட்சம் அளவில் உற்பத்தியும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"1991 -இல் இந்த நிறுவனம் திருப்பதி திருமலை திருக்கோயில் கருடமண்டபத்தின் கீழ்ப் பகுதிக்குத் தங்கமுலாம் பூசும் பணியை ரூ.23.37 இலட்சம் செலவில் உபயதாரர் மூலமாகச் செய்திருக்கிறது. அதே உபயதாரர், கருடமண்டபத்தின் மேல் பகுதிக்கு ரூ.23.52 இலட்சம் செலவில் தங்கமுலாம் பூசும் வேலையை இந்த நிறுவனத்திற்கு அளிக்கவிருக்கிறார். இலண்டனில் உள்ள அருள்மிகு மகாலட்சுமித் திருக்கோயிலுக்கு தேக்குமரத்தாலான ரதம் ஒன்று செய்து கேட்டிருக்கிறார்கள்.

"இதுபோன்ற நுணுக்கமான கலைப்பணிகள் தமிழ்நாட்டில் அல்லாமல் வேறு எந்த மாநிலத்திலும் இத்தனைச் சிறப்பாகச் செய்யப்படுவதில்லை. டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான தமிழக அரசு இந்த அளவிற்குக் கலைகளை ஊக்குவித்து வருகிறது. இதனால், கைவினைத் தொழிலாளர்களின் பல எண்ணற்ற குடும்பங்கள் நல்வாழ்வு பெற்று வருகின்றன.

இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். அப்போது தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ஓ.எஸ். மணியனும் உடனிருந்தார்.

–நிகழ்ச்சித் தொகுப்பு: 'கங்கைகொண்டான்'

# நலிந்தோர் நலம்பெற...

தி.சு. கிருட்டிணமூர்த்தி
மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர்
நல அலுவலர்,
விருதுநகர்.



மாணவர் விடுதி - வெளிப்புறத் தோற்றம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மேம்பாடடையத் தமிழ்நாடு அரசு வகுத்துக் கொடுத்த வழியிலே காமராசர் மாவட்டத்தில் பல பணிகள் செயலாக்கம் பெற்று வருகின்றன.

மேற்படி வகுப்பினர் முன்னேற்றம் காண மேற்கொள்ளும் பணிகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

அ. கல்வி

ஆ. பொருளாதாரம்

இ. பயிற்சிகள்

பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோருக்காகச் சென்ற ஆண்டில் ரூ.1,17,91,060 செலவிடப்பட்டது. நடப்பு 1994-95-ஆம் ஆண்டில் ரூ.1,22,68,160 ஒதுக்கீடு பெறப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## அ. கல்வி

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பதற்கிணங்க கல்விப் பணி இங்கு சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றது. மாணவர், மாணவியர்கட்குக் கீழ்கண்ட வசதிகள் இலவசமாகச் செய்துதரப்படுகின்றன.

## கல்வி உதவித் தொகைகள்

பள்ளிக் கல்வியில் மாணவர்கட்கு இலவசப் பாடப்புத்தகங்களும் தனிக் கட்டணம் ஈடு செய்தலும் வழங்கப்படுகின்றது. நடப்பு ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 6,000 நபர்களும், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 5,000 நபர்களும் இதனடிப்படையில் பெரிதும் பயனடைவர்.

ஆங்கிலப் போதுரை மொழியில் பயில்பவர்கட்குப் படிப்புக் கட்டணம் ஈடுசெய்து தரப்படுகின்றது.

இலவசக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குப் பெற்றோர் ஆண்டு வருவாய் ரூ.12,000க்கு மிகைப்படாமல் இருந்தால் படிப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் சிறப்புக் கட்டணம் முழுவதும் ஈடுசெய்து தரப்படுவதுடன், புத்தகக் கட்டணம், உண்டி உறையுள் கட்டணம் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் வழங்கப்படுகின்றது.

மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரபினர்கட்கு பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.காம். பட்டப்படிப்புப் பயிலும் போது, வருமான வரம்பு ஏதும் இன்றியும்- மருத்துவம், பொறியியல் பயிலும் மாணவர்களைப் பொருத்த மட்டில் ரூ.12,000 ஆண்டு வருமான நிபந்தனைக்குட்பட்டும் மேற்படி உதவித்தொகை வழங்கப்படுகின்றது. இத்திட்டங்களின் மூலம், சுமார் 9,000 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரபினர் 5,000 பேரும் பயனடைவர்.

## விடுதிகள்

கிராமப்புற மக்கள் பயனடையத் தக்க வகையில் 26 விடுதிகள் தேர்ந்த காப்பாளர், காப்பாளிகளைக் கொண்டு சிறப்பாக நடத்தப் பெற்று வருகின்றன. இதனால் ஆண்டு தோறும் 1,400 மாணவ, மாணவியர் பயன்பெற்று வருகின்றனர்.

கடந்த ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வில் விடுதியில் தங்கிப்படிக்கும் மாணவ, மாணவியர் சிறப்பாகத் தேர்வு எழுதி நல்ல மதிப்பெண் களுடன் தேர்ச்சி பெற்றனர். ப்ளஸ் 2 மேல்நிலைத் தேர்வில், கீழ்க்கண்ட விடுதிகளிலிருந்து அனுப்பப்பட்ட மாணவ, மாணவியர் 100 சதவிகிதம் தேர்ச்சியுற்றுச் சாதனை படைத் துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள்

அரசு மாணவர் விடுதி, கோபால புரம். அரசு மாணவர் விடுதி, இராசபாளையம். அரசு மாணவர் விடுதி, மலைப்பட்டி. அரசு மாணவர் விடுதி, வன்னியம்பட்டி.

### பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகள்

அரசு மாணவியர் விடுதி, குல்லூர் சந்தை அரசு மாணவியர் விடுதி, கோபாலபுரம் அரசு மாணவியர் விடுதி, வன்னியம்பட்டி,

### பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி

அரசு மாணவர் விடுதி, ப்பி. புதுப்பட்டி, பள்ளி இறுதித் தேர்வில் கீழ்க்கண்டவாறு விடுதிகளிலிருந்து அனுப்பப்பட்ட மாணவ, மாண வியர் 100 சதவிகிதம் தேர்ச்சி விழுக் காடு அளித்துப் பெருமை சேர்த் தனர்:

### பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி

அரசு மாணவர் விடுதி, இராசபாளையம். அரசு மாணவர் விடுதி, வன்னியம்பட்டி .

### பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி

அரசு மாணவியர் விடுதி, பந்தல்குடி. அரசு மாணவியர் விடுதி, ஆலங்குளம். அரசு மாணவியர் விடுதி, வன்னியம்பட்டி.

### மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி

அரசு மாணவர் விடுதி, அருப்புக் கோட்டை.

### மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி

அரசு மாணவியர் விடுதி, திருச்சுழி.

கோபாலபுரம் மாணவியர் விடுதி யில் (50) மாணவியரும் தேர்ச்சியுற்று 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றார்கள். வன்னியம்பட்டியில் உள்ள அர சினர் பிற்பட்ட வகுப்பு மாண வர்கள் 50 பேர் அனைவரும் தேர்ச்சி பெற்று முழுத்தேர்ச்சி 100 விழுக் காட்டைக் கொடுத்துள்ளனர். செல்வி எல்லம்மாள் 405 மதிப் பெண்கள் எடுத்துச் சாதனைபுரிந் துள்ளார்.

அருப்புக்கோட்டை மாணவியர் விடுதியிலிருந்து பள்ளி இறுதித் தேர்வுக்கு அனுப்பப்பட்ட செல்வி சுதா 420 மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி அடைந்துள்ளார். மல்லாங் கிணறு விடுதியிலிருந்து அனுப்பப் பட்ட செல்வன் மாயகிருஷ்ணன் 410 மதிப்பெண் பெற்று, பள்ளியில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றுள்ளார். குல்லூர்சந்தை மாண வியர் விடுதியில் பயின்ற முரு கேஸ்வரி என்பவர் 416 மதிப் பெண்கள் பெற்றுத் தேர்ச்சி அடைந் துள்ளார். பந்தல்குடி மாணவர் விடுதியில் பயின்ற மாணவர் வைரமுத்து என்பவர் 949 மதிப் பெண்களும், கர்ணன் என்பவர் 934 மதிப்பெண்களும் பெற்றுத் தேர்ச்சி யடைந்துள்ளனர்.

வருகிற ஆண்டிலும் இதே நிலை தொடர, கல்வியில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இவர் களுக்கு நல்ல சுற்றுப்புறச் சூழல் அமையவேண்டும் என்ற நோக்கில் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின் றன. இதுவரை 3 அரசுக் கட்டடங் களில் விடுதிகள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

கடந்த 22.8.94 அன்று அருப்புக் கோட்டை வட்டம் கோபால புரத்தில் ரூ.9.67 இலட்சம் செலவில் கட்டப்பட்டுவந்த மாணவர் விடுதி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப் பட்டுள்ளது.

நடப்பு 1994-95-ஆம் ஆண்டில் மேலும் 2 பள்ளி மாணவியர் விடுதிக் கட்டடம் கட்ட அரசு அனுமதித்துள்ளது. கீழ்க்கண்ட 2 இடங்களில் மேற்படி கட்டடங்கள் கட்டும் பணி விரைவில் துவக்கப் படவுள்ளது.

1. எம். ரெட்டியபட்டி, அருப்புக் கோட்டை வட்டம்.

2. கோபாலபுரம், அருப்புக் கோட்டை வட்டம்.



விடுதி சமையல் கூடம்

சென்ற ஆண்டில் 4 விடுதிகளில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் இது தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### பொருளாதாரத் திட்டங்கள்

சென்ற ஆண்டிலும் நடப்பு ஆண்டிலுமாக இதுவரை 538 சலவைத் தொழில்புரிபவர்கட்கு இலவசமாகத் தேய்ப்புப் பெட்டிகளும், சவரத் தொழில்புரிபவர்கட்கு 14 சவரப் பெட்டிகளும் இலவசமாக வழங்கப் பட்டுள்ளன. மண்பாண்டத் தொழில்புரியும் ஒருவருக்கு மின் விசைச்சக்கரம் பொருத்தப்பட்ட இயந்திரம் இலவசமாக வழங்கப் பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 11 நபர்களுக்கு நடமாடும் சலவையகம் அமைக்க மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்பட்டது. முடிதிருத்தும் நாவிதர்களுக்குச் சவரக் கடைவைகக 8 நபர்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்பட்டது. 1 நபருக்குச் சலவைக் கடை வைக்க மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கப் பட்டது.

### இலவச மனைப்பட்டா

நடப்பு ஆண்டில் ரூபாய் 3 இலட்சம் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரப்பினருக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்படவுள்ளன.

### தமிழ்நாடு பொருளாதார மேபாட்டுக் கழகக் கடன்வசதி

இதுவரை இம்மாவட்டத்திலிருந்து 386 விண்ணப்பங்கள் தமிழ்நாடு பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு உதவியுடன் சமூகத்தில் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசுப் பணி தேர்வு எழுதுவதற்காக இலவசப் பயிற்சி முகாம் விருதுநகர் செந்திக்குமாரநாடார் கல்லூரியில் துவக்கப்பட்டு 40 பேர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

ப்ளஸ் 2 தேர்வில் மாவட்டத்தில் அதிக மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவர், மாணவியருக்குத் தொழிற் கல்வி பயில ரூ.2,000 பேரறிஞர் அண்ணா பரிசுத்தொகை 24.9.94 அன்று வழங்கப்படவுள்ளது. 14 நபர்கட்குப் புதுப்பித்தல் பரிசுத் தொகை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சிவகாசியில் வழங்கப்பட்டது.

மாவட்டத்தில் 10-ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்று பாலிடெக்னிக் படிக்கும் 2 மாணவர் 2 மாணவியருக்குத் தந்தை பெரியார் பரிசுத் தொகை- ரூ.2,000 வீதம் வழங்கப்படவுள்ளது. இத்திட்டங்களினால் காமராசர் மாவட்டத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மக்கள் பெரிதும் பயன் பெற்று வருகின்றனர்.

---

## களக்காடு – முண்டந்துறை புலிகள் காப்பகம்!

இங்கே நெடிதுயர்ந்த மலைகள்,
பயங்கரமான பள்ளத்தாக்குகள்,
மலை மடிப்புகளிடையே
படர்ந்துள்ள் அடர்ந்த காடுகள்,
மலைக்க வைக்கும்
மலைச்சரிவுகள், பசும் கம்பளம்
விரித்தாற்போலுள்ள
புல்வெளிகள், அமைதியாக
ஓடும் ஓடைகள், சீறிவரும்
சிற்றாறுகள், மலையுச்சியிலிருந்து
விழும் அழகிய அருவிகள்,
வண்ணப்பூக்களையும்
இலைகளையும் கொண்ட
அழகுமிகு தாவர இனவகைகள்,
ஓங்கி உயர்ந்த மரங்கள் சிறிய
அளவிலிருந்து பெரிய
அளவிலான கொடிகள் மற்றும்
மருந்து வகைத் தாவரங்கள் நம்
கண்களுக்கு விருந்தாக
அமைகின்றன.

மலைமுகடுகளில் பயமின்றித்
தாவிச் செல்லும் வரையாடுகள்,
மரத்துக்கு மரம் தாவும்
குரங்கினங்கள், மலை அணில்,
யானையின் ஏறுநடை, மிரண்டு
ஓடும் மானின் அழகு, பளிங்கு
போன்ற நீர்த்திவலைகள்
தெரிவிக்கும் காட்சி, அவற்றில்
மின்னல்போல் செல்லும்
மீன்வகைகள், முங்கி முங்கிக்
குளிக்கும் நீர்நாய்கள்,
முதலைகள்... பார்ப்பதற்குக்
கண்கொள்ளாக் காட்சி!

அடர்ந்த காடுகளில்
ரீங்காரமிடும் வண்டினிசை,
பாடும் பறவைகளது இசை,
சலசலக்கும் ஓடை இசை,
சிற்றாறுகளின் சீறும் இசை,
அருவிகளின் ஆரவார இசை,
அடர்ந்த மரங்களிடையே புகும்
காற்றிசை, மலை அணில்களின்
கதறல், கருங்குரங்கின் கூவல்,
புலியின் உறுமல், யானையின்
பிளிறுமிசை, தவளைகளின்
ரீங்காரச் சத்தம்
இவையெல்லாம் காதுக்கு
விருந்தாகும்!

இங்குள்ள பாணதீர்த்தம்
நீர்வீழ்ச்சி, அகத்தியர் நீர்வீழ்ச்சி,
மணிமுத்தாறு நீர்வீழ்ச்சி,
கலியாண தீர்த்தம் இவைகளில்
குளிப்பது உடலுக்கு நல்லது.
அகத்தியர்கோயில், பாவநாச
சிவன் கோயில், சொரித்து
அய்யனார் கோயில்,
வனப்பேச்சியம்மன்கோயில்,
கோலக்நாகர்கோயில்,
பள்ளிவாசல், தோரணமலை
முருகன் கோயில்,
கருமாண்டியம்மன்கோயில்,
மலைநம்பிகோயில் இவைகளில்
சென்று தரிசிப்பது மனதுக்கு
ஆறுதலையும் நிம்மதியையும்
கொடுக்கும்!

இப்புலிகள் காப்பகத்தில்,
எங்கு நோக்கிடினும்
இறைவனின் ஆட்சி!
இயற்கையின் மாட்சி!

– பாண்டியன்
ஆராய்ச்சி அலுவலர்
புலிகள் காப்பகம்,
அம்பாசமுத்திரம்

# ஔவையார்

**1995-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்களில், தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறு வதையொட்டி, புலவர் பெரு மக்கள் குறித்த கட்டுரை இதழ்தோறும் இடம் பெறுகிறது. அந்த வகையில், அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டிய ஔவையார் குறித்த கட்டுரை இங்கே இடம் பெறுகின்றது.**

ஔவைப் பாட்டி என்று தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப் படும் ஔவையார், தமிழ் இலக் கியத்தில் தமக்கென்று தனி இடம் பெற்ற சிறந்த கவியரசி. எளிமை யான தமிழ்ப் பாடல்களின் அரு மையான கருத்துக்களை அமைத்து வழங்கியுள்ள ஔவையார், தமிழ் அறிந்த குழந்தைகள் அனைவரின் உள்ளத்திலும் அழியாத இடம் பெற்று விளங்குகிறார். அவருடைய 'ஆத்தி சூடி'யைப் படிக்காத தமிழ்க் குழந்தைகள் இல்லை. அவருடைய பல நூல்களையும் பாடல் களையும் சிறு குழந்தைகள் படிப் பது மட்டுமின்றி, தேர்ந்த புலவர்களும் திருக்குறள் போன்ற பெருநூல்களுடன் சேர்த்து ஆழ்ந்து கற்று ஆய்வு செய்கிறார்கள்.

கி.மு. 500 முதல் கி.பி. 200 வரை யான காலம் தமிழ் இலக்கியத்தின் பொற்காலமான சங்ககாலம் என்று கருதப்படுகிறது. சங்க காலத்தில் 473 கவிஞர்கள் வாழ்ந் ததாகக் கூறப்படுகிறது. அவர்களில் 33 பேர் பெண்கள், பெண் கவிஞர் களில் ஒருவரான ஔவையார் நீண்ட காலம் வாழ்ந்து பல பாடல்கள் பாடியுள்ளார்.

## சிறந்த கருத்தாழம்

ஔவையார் என்பது அவரது இயற்பெயர் அல்ல. அவர் தீண்டத் தகாததாகக் கருதப்பட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்தவர் என்பது வழிவழி வரலாறு. அவர் திரு மணம் செய்து கொள்ள விரும் பாமல் துறவு வாழ்க்கையை விரும்பி மேற்கொண்டார். அவர் தாம் சென்ற இடமெல்லாம் தமது பாடல்கள் மூலம் அறிவுச் சுடர் ஏற்றிவந்தார். அந்தக் காலத் திலேயே மக்களின் அறியாமை இருளைப் போக்க அவர் அறி வொளி இயக்கம் நடத்தினார் என்று கூறலாம்.

ஔவையார் என்ற பெயரில் பல பெண் கவிஞர்கள் வாழ்ந்ததாகவும் அவர்கள் அனைவரைப் பற்றிய கதைகளும் வரலாறுகளும் ஒன்று சேர்ந்து ஒரே ஔவையாருக்கு உரியனவாக ஆகிவிட்டன என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறு கிறார்கள். குறைந்தது மூன்று ஔவையார்களைத் தனியாக அடையாளம் காண முடிகிறது. சங்ககால ஔவையார் ஒருவர், 9-10 நூற்றாண்டுகளில் வாழ்ந்து நீதிநூல்கள் இயற்றிய ஔவையார் ஒருவர், 12-14 நூற்றாண்டுகளில் வாழ்ந்து ஒட்டக்கூத்தருக்கும் புக ழேந்தியாருக்கும் சமகாலத்தவராக இருந்த ஔவையார் ஒருவர் என மூன்று கவிஞர்களை நாம் அறிய முடிகிறது. உண்மையான ஔவை யார் யாராக இருந்தபோதிலும், அவரது பெயரில் வழங்கப்படும் பாடல்கள் சிறந்த கருத்தாழம் கொண்டு விளங்குகின்றன.

எளிமையான தமிழில் எல்லோ ரும் புரிந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ள அவரது பாடல்கள் அவரது ஆழ்ந்து அகன்ற அறிவை யும் பாடல் புனைவதில் அவருக்கு இருந்த அற்புதத் திறமையையும் காட்டுகின்றன. அவர் நீண்ட பாடல்கள் பல இயற்றியுள்ளார் என்றாலும், குழந்தைகளுக்கெனப் இயற்றப்பட்ட ஒரு வரிப் பாடல்கள் உள்ளிட்ட சிறிய பாடல்கள் மக் களிடையே பிரபலமாக வழங்கு கின்றன. பெரியவர்களும்கூட படித்து ரசிக்கும் பாடல்கள் அவை. இந்தப் பாடல்களில் ஔவையார் சிறந்த நீதி நூல்களின் கருத்தைத் திரட்டி எளிமையான வடிவில் மக்களுக்கு வழங்கியிருக் கிறார்.

## பொருள் செறிந்த பாடல்கள்

ஔவையாரின் நூல்களில் ஆத்தி சூடி 108 ஒற்றை வரிகளையும், கொன்றைவேந்தன் 91 ஒற்றை வரிகளையும் கொண்டவை; மூதுரை 30 வெண்பாக்களையும், நல்வழி 40 வெண்பாக்களையும் கொண்டவை. இந்த நான்கு நூல் களும் ஆரம்ப வகுப்புகளுக்கான தமிழ்ப்பாடப் புத்தகங்களில் நிரந் தரமாக இடம் பெற்றிருக்கின்றன. வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நீதி நெறிகளை இந்த நூல்கள் இளம் உள்ளங்களில் எளிதாகப் பதிய வைக்கின்றன. அசதிக்கோவை, பந்தனந்தாதி

ஆகிய நூல்களும், நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய சங்க நூல்களில் பல பாடல்களும் ஔவையாரால் பாடப்பட்டுள்ளன.

ஔவையாரின் அறிவின் ஆழத்துக்கும், ஆழ்ந்த கருத்துக்களை எளிய சொற்களில் எடுத்துரைக்கும் திறனுக்கும் எடுத்துக்காட்டாக ஒரு சில பாடல்களையும் வரிகளையும் சுட்டிக் காட்டலாம். ஆத்திசூடியிலிருந்து சில மணிமொழிகள் :

நயம்பட உரை (இனிமையாகப் பேசவும்).

சக்கர நெறிநில் (அரசின் விதிகளைக் கடைப்பிடித்து நடக்கவும்).

சோம்பித் திரியேல் (சோம்பேறியாகப் பொழுதைக் கழிக்க வேண்டாம்).

தூக்கி வினைசெய் (சிந்தித்துச் செயல்படவும்).

நாடு ஒப்பன செய் (நாட்டுக்கு நலமான செயல்களையே செய்யவும்).

நூல் பல கல் (பல நூல்களைக் கற்று அறிவை வளர்க்கவும்).

கொன்றை வேந்தனிலிருந்து சில வரிகளை மேற்கோள் காட்டலாம்;

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.

சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.

தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை.

## பரந்த பார்வை

இதேபோல- 'வாக்குண்டாம்' என்று வழங்கப்படும் மூதுரையிலும் சிறந்த நீதிகளையும் அறிவுரைகளையும் கூறும் பல பாடல்களைக் குறிப்பிடலாம். உதாரணத்துக்குச் சில:

'நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந் நன்றி
என்று தருங்கொல் என வேண்டா நின்று
தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.'

-ஒருவருக்கு ஒரு நன்மை செய்தால் 'அதற்குக் கைம்மாறு எப்போது தருவார்' என்று எண்ணிக்கொண்டிருக்க வேண்டாம். தென்னை மரத்துக்கு அடியில் ஊற்றிய நீரை, அம்மரம் தன் தலையால் இளநீராகத் தருவதைக் காணுங்கள்.

மன்னனும் மாசறக் கற்றோனும்
சீர் தூக்கின்
மன்னனின் கற்றோன்
சிறப்பு உடையன்- மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பு
இல்லை,
கற்றோற்குச் சென்ற இட
மெல்லாம் சிறப்பு.'

-மன்னனைவிடக் கல்விமானே சிறந்தவனாவான்; ஏனென்றால் மன்னனுக்குத் தன் நாட்டைத் தவிர பிற நாடுகளில் சிறப்பு இல்லை; ஆனால் கல்விமானுக்கு எல்லா நாடுகளிலும் சிறப்பு உண்டு.

'வேங்கை வரிப்புலி நோய்தீர்த்த
விடகாரி
ஆங்கு அதனுக்கு ஆகாரம்
ஆனாற்போல்- பாங்கறியாப்
புல்லறிவாளர்க்குச் செய்த
உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்'.

-புலியின் நோய்க்கு வைத்தியம் செய்து நோயை நீக்கிய மருத்துவன் அந்தப் புலிக்கே இரையாகி விடுகிறான். அதுபோலவே, நன்றியுணர்வு இல்லாதவர்களுக்குச் செய்யும் உதவி, கல்லின் மேல் போடப்பட்ட மண்பானையைப் போல் ஆகிவிடுகிறது.

ஔவையாரின் பாடல்கள் அவரது பார்வை பரந்து விரிந்து உள்ளதைக் காட்டுகின்றன. வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் குடும்ப வாழ்க்கை, தெய்வபக்தி, ஏழைகளுக்கு உதவுதல், நீதி,



கௌரவம், நட்பு, அரசியல் போன்ற வெவ்வேறு துறைகளிலும் அவரது கூரிய அறிவுப் பார்வை பதிந்திருக்கிறது. தாம் கூறவந்த கருத்துக்களை அவர் கூறியிருக்கும் விதம் அவரது தனிச் சிறப்பைக் காட்டுகிறது. வாழ்க்கையில் நலிவுற்ற மக்களின்பால் பேரன்பு கொண்டு வாழ்ந்த ஔவையார் அவர்களுக்கு நண்பராகவும், ஆசானாகவும், அறிவின் உருவாகவும் விளங்கினார். 'ஔவையார் உழைக்கும் மக்களின் கலாசாரத்தின் பிரதிநிதி' என்று ராஜாஜி ஒரு முறை கூறியது மிகவும் பொருத்தமானதே.

–பி. கிருஷ்ணமூர்த்தி

# தூத்துக்குடியில் உலக வங்கிக் குழுவினர் ஆலோசனை

உலக வங்கிக் குழுவைச் சார்ந்த திரு. மைக்கேல் வில்பிரட், திரு .ஜான் கிரிக் மற்றும் திரு. துரைப்பாண்டியன் ஆகியோர் சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஹேமந்த் குமார் சின்கா, அவர்களுடன் தூத்துக்குடி மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து விவாதித்தனர். தூத்துக்குடி நகராட்சியின் நிதி நிலைமை பற்றியும் அவர்கள் விவாதித்தனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், உலக வங்கிக் குழுவினரை, சாலைப் பராமரிப்பு மற்றும் சமூகக் கூடங்கள் கட்டுவதற்கு உதவி செய்வதோடு, பெரிய திட்டங்களுக்கு அதிக அளவில் உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஏற்றுமதி தொழில் கொள்கையினைத் தளர்த்தியதின் காரணமாக, தூத்துக்குடி ஒரு தொழில் வளம்மிக்க நகரமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

தூத்துக்குடியை அழகுபடுத்துவதில், கீழ்க் காணும் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென, மாவட்ட ஆட்சித் தலைவர் உலக வங்கிக் குழுவினரைக் கேட்டுக் கொண்டார்.

தேசிய நெடுஞ்சாலையில் உள்ள மீளவிட்டான் கிராமத்தில் ஒரு லாரி நிலையம் நவீன வசதிகளுடனும் - திட்டங்கள் பதிவு அலுவலகம் ஆகிய வசதிகளுடனும் அமைக்கப்பட்டால் நகரில் உள்ள நெரிசலைத் தவிர்க்கலாம்.

இருவழிப்பாதை அமைத்து, பக்கிள் கால்வாயைச் சீரமைப்பதன் மூலம் மழைக் காலங்களில் நகரில் தேங்கும் நீரைத் தேங்க விடாமல் செய்யலாம்.

சுரங்கப்பாதை, ரயில்பாதைகள் அமைப்பதன் மூலம் நகரில் வாகனங்களின் நெரிசலை 'ரயில்வே கேட்' சாத்தியுள்ள நேரங்களில் தவிர்க்க முடியும். நீண்ட நாள் கோரிக்கையான நகரில் உள்ள ரயில் நிலையத்தை மீளவிட்டானுக்கு மாற்றி அமைக்கலாம்.

நகரைச் சுற்றிப் புறவழிச்சாலை அமைப்பதன் மூலம், நகரில் வாகனங்களின் நெரிசலைத் தவிர்க்கலாம்.

பாதாளச்சாக்கடை அமைத்தல் மற்றும் நகரில் உள்ள சாலைகளைப் பதுமுபார்த்தல்.

தூத்துக்குடி நகராட்சியின் எல்லையை விரிவுபடுத்தி, மேலும் சிறப்புடன் செயல்பட உலக வங்கிக் குழு தீர்மானித்தது.

மேலும், உலக வங்கிக் குழு நகரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களைப் பராமரிப்பது என முடிவு செய்தது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நகரின் வளர்ச்சிக்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை குறித்தும் ஸ்டேடியம் அமைப்புப் பணிகள் மற்றும் ரோச் பூங்கா மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்தும் விளக்கிக் கூறினார்.

உலக வங்கிக் குழு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பணியைப் பாராட்டியதோடு, நகரின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து தமிழகத்தின் உயர் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்த பின்னர் மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்தனர்.

—மு. பிச்சையா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தூத்துக்குடி

## மீன்

*மீன் ஊட்டச் சத்து நிறைந்தது. நமது கடல் பகுதியிலிருந்து ஆண்டுக்கு 39 லட்சம் டன் மீன் பிடிக்க சாத்தியம் உள்ளது. ஆனால் 26 லட்சம் டன் மீன்கள்தாம் பிடிக்கப்படுகின்றன. உள்நாட்டு நீர் நிலைகளில் 45 லட்சம் டன் மீன் பிடிக்க வாய்ப்புள்ளது. ஆனால் உற்பத்தியோ 18 லட்சம் டன் தான்.*

*தற்போது 1,42,500 பாரம்பரிய மீன்பிடிப் படகுகளும் 34,000 இயந்திரப் படகுகளும், 180 ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளும் இதில் ஈடுபட்டுள்ளன.*

8 ஆம் பக்கத் தொடர்ச்சி
பெற்றுக் கொண்டிருக்கிறது, "புரட்சித்தலைவியின் முழக்கம்" என்பது இந்தியாவின் புகழ்மிக்க தலைவியின் விளக்கம். இது ஓர் அரசியல் இலக்கிய நூல்.

**மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் பேசியதாவது:**

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, முன்றாண்டுகள் முடிந்து வெற்றிநடை போடுகிறது. அவர் போடுகிற திட்டங்கள் அனைத்தும் புதுமை, புதுமை,



புதுமை. அந்தப் புதுமையெல்லாம் இந்தப் புரட்சி நூலில் புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிய உரைகளாகப்- பேசிய பேச்சு களாக இருக்கின்றன. டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தீட்டிச் செயல்படுத்துகிற தொட்டில் குழந் தைத் திட்டம் என்றாலும், மகளிர் காவல் நிலையம் என்றாலும் அனைத்தும் புதுமை, புதுமை, புதுமை!

**மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசியதாவது:**

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்து வரலாற்றுப் பெட்டகமாக, செய்தித்துறை அளித்திருக்கிறது. டாக்டர் புரட்சித்தலைவி அவர் களது அரசியல் தோற்றத்தை, அவர்களது ஞானச் செருக்கை, தொண்டு உள்ளத்தை, உலகப் பார்வையைப், "புரட்சித்தலைவி



யின் முழக்கம்" நூலின் மூன்று தொகுதிகளும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. புத்தகம் என்று சொன்னால், ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குகிற திறம் படைத்ததாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்ட இலக்கணத் திற்குச் சான்றாக இந்த நூல் விளங்குகிறது. 100 ஆண்டுகளுக் குப் பிறகு வரப்போகிற தலை முறைக்கும் வழிகாட்டுகிற நூல் "புரட்சித்தலைவியின் முழக்கம்".

**மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் திரு. சேடபட்டி முத்தையா அவர்கள் பேசும்போது கூறியதாவது:**

சங்க காலத்திலிருந்து இலக்கிய நூல்களை மதுரையில் வெளியிடு வதுதான் வழக்கம். அப்போது எந்த நூல்களைப் பொற்றாமரைக்



குளம் தாங்கி நிற்குமோ அந்த நூல்கள்தான் ஏற்றுக் கொள்ளப் படும். இன்று பொற்றாமரை இல்லை. அதற்கு பதிலாக மக்கள் வெள்ளம் முன்பு, புரட்சித்தலைவி யின் புத்தகம் வெளியிடப் பட்டுள்ளது. டாக்டர் புரட்சித் தலைவி உச்சரித்த வார்த்தைகளை 6 கோடி மக்கள் இன்று பெற்றுள் ளார்கள். ஆங்கில மொழியில் அவர் ஆற்றிய உரைகளும் புத்தக மாக வெளியிடப்பட்டுள்ளது. சட்டசபையில் முதல்வரின் சிந் தனை எதுவோ அதுதான் பேச் சாக வரும். அவர் ஒரு அரசியல் ஞானி.

**மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புத்தகத்தை வெளியிட்டுப் பேசும்போது கூறியதாவது:**



ஒரு கட்சியின் தலைவர் எப்படி இருக்க வேண்டும்; ஒரு ஆட்சியை நடத்துகிற முதலமைச்சர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார். எப்படிப்பட்ட உயர்ந்த கொள்கை யுடன், நிலைத்த குறிக்கோளுடன் இந்த ஆட்சியைப் புரட்சித்தலைவி அவர்கள் நடத்திக் கொண்டிருக் கிறார், இதுவரை நிகழ்ந்த சாத னைகள் என்ன? சாதிக்கப் போகும் திட்டங்கள் என்ன என்பதை எடுத்துக்காட்டுகிற நூலாகப் "புரட்சித்தலைவியின் முழக்கம்"

நூலைச் செய்தித்துறை வெளியிட்டிருக்கிறது. மிகவும் அழகான நூல்.

69 சதவிகித இட ஒதுக்கீடு பெற்றுத் தந்தது என்பது ஒரு சாதாரண செயல் அல்ல. ஒரு மகத்தான செயல்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட விடமாட்டேன் என வீறு கொண்டெழுந்து வெற்றி பெற்ற செயல் 70 ஆண்டுக் காலமாகச் சாதிக்க முடியாத ஒரு செயல். இன்று புரட்சித் தலைவியால் சட்டப்பூர்வமாக்கப்பட்ட செயல். இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கும் தலைமுறை தலைமுறையாக வாழ்த்தி வணங்க வேண்டிய செயல்.

**"புரட்சித்தலைவி முழக்கம்"**
**தொகுதி-3**
**பக்கம்: 400 விலை: ரூ.30**
***(அடங்கிய உரைகள் - 54)***

**"Jayalalitha Speaks"**
***Volume-3***
**பக்கம்: 164 விலை: ரூ.20**
***(அடங்கிய உரைகள் - 23)***

முடிவில், செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் நன்றிகூற விழா இனிதே முடிந்தது.

விழாவில் பாண்டியன் போக்குவரத்துக்கழக இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழகத்தின் அனைத்து அமைச்சர்களும் மற்றும் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்களும் பங்கேற்க இரவு ஒரு மணி வரையிலும் நடைபெற்ற இவ்விழாவில்



பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் விழா முடியும் வரையில் கலையாது காத்துநின்று ரசித்து மகிழ்ந்தனர் என்பதே இவ்விழாவின் சிறப்புக்கு எடுத்துக்காட்டு அல்லவா!

நிகழ்ச்சித் தொகுப்பு: சாரதி

---

**அக்டோபர் 1-7**
**வன விலங்கு வாரம்:**

# பல்லுயிர்ப் பண்பு பெருகுமா?



உலகளவில் பல்லுயிர்ப் பண்பு பெருமளவில் உள்ளதாக 12 பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் இந்தியாவும் ஒன்று. அதேபோல், உலகளவில் 18 பகுதிகள் வெப்பப் பகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் இந்தியாவில், கிழக்கு இமாலயப் பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலை என இரண்டு உள்ளன.

இந்தியாவில் 45,000 செடி வகைகள் உள்ளன. இது, உலகத் தாவர இனத்தில் 7 சதவிகிதம். இவற்றுள், 15,000 பூச் செடிகளும் அடங்கும், இத்தாவரங்களில் 4,900 பிரிவுகள் இந்தியாவிற்கே உரித்தவை. எனினும் இவற்றில் 1,500 வகைகள் அழிவை எதிர் நோக்கியுள்ளன.

இந்தியாவில் 81,000 வகை உயிரினங்கள் உள்ளன. இவற்றில் 57,000 பூச்சி வகைகள்; உலகளவில் இது 6.4 சதவிகிதமாகும். 2,546 மீன் வகைகள், 428 ஊர்வன, 1,228 பறவை, 372 பாலூட்டி, 204 நிலநீர் உயிரினப் பிரிவுகளும் இதில் அடக்கம். இவற்றுள் 62 சதவிகிதம் இந்திய மண்ணிற்கு உரித்தானவை.

மக்கள் தொகைப் பெருக்கமும், வேளாண் பரப்பு விரிவாக்கமும் நமது பல்லுயிர்ப் பண்பிற்கு ஆபத்தை விளைவிக்கின்றன. இந்த நூற்றாண்டிலேயே இந்தியச் சிறுத்தைப் புலி, மலைக் காடை, செந்தலை வாத்து போன்ற சில உயிரினங்கள் அழிந்தே விட்டன.

மனிதன் உட்பட, அனைத்து உயிர்களும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. ஓர் உயிரினத்தின் அழிவு, இத்தகைய உயிர்ச் சங்கிலியைப் பிரித்து, இயற்கையைப் பாதித்து, அழிவுக்கு வழி கோலும்.

வன விலங்கு வாரத்தை ஒட்டி, பல்லுயிர்ப் பண்பைக் காக்க நாம் உறுதி கொள்வோமாக!

# நல்ல தமிழ்ச் சொற்கள்

கோ. முத்துப்பிள்ளை

ஆங்கிலச் சொற்களுக்கேற்ப, பொருத்தமான நல்ல தமிழ்ச் சொற்களைத் தேர்வு செய்வது என்பது கடினமான செயல்தான். மொழிபெயர்ப்பு என்பதே ஒரு கலைதானே! அந்தக் கலையில் அனுபவமிக்கவரும், தமிழ்நாடு ஆட்சிமொழி ஆணையத்தின் உறுப்பினராகப் பணியாற்றியவருமான தமிழ்த் தொண்டர் கோ. முத்துப்பிள்ளை அவர்களின் கைவண்ணத்தில் உருவான நல்ல தமிழ்ச் சொற்களைப் படித்துச் சுவைப்போமா

Promptness - விரைந்து வினைசெயல்

Proposal - கருத்துரு

Prospectus - வாய்ப்பு விளக்கம்

Protocol - மரபு நெறி

Query - ஐய வினா

Queue - வரிசை

Quotation - விலைப்புள்ளி

Rank - வரிசையிடம்

Raw skin - பச்சைத் தோல்

Ready cash - உடன் தொகை

Ready Reckoner - உடன் கணிப்பேடு

Realism - நேரியம்

Recurring expenditure - தொடரும் செலவினம்

Red carpet - நடை பாவாடை

Redirected - மறு முகவரியிடப்பட்டது

Reference Books - பார்வை நூல்கள்

Refill - மறுநிரப்பி

Remedy - தீர்திறம்

Remote control - தொலைவியக்கம்

Review - சீராய்வு

Scrutiny - கூர்ந்தாய்வு

Round Tana - வட்டத் திட்டு

Royalty - உரிமை ஊதியம்

Rubber - தேய்ப்பம்

'Eraser - அழிப்பம்

Rumour - ஊர்ப் பேச்சு, ஓமல்

Running File - தொடர் கோப்பு

Secret - மறையம்

Selected Poems - இன்சுவைக் கவிகள்

Selection Grade - தெரிவு நிலை

Senior - முதுவர்

Sex - பாலினம்

Shade - சாயல்

Single window committee - ஒருமுகப்புச் செயல்வினைக் குழு

Slide - திரைப்பட வில்லை

Snack bar - நுண்மை நுகர்வகம்

Sophisticated Instruments - புத்தாக்க நுண்கருவிகள்

Stage fear - அவையச்சம், மெய்விதிர்ப்பு

Standard - தரப்பாடு

Stethoscope - நாடிக்குழல்

Stretcher - கைப்படுக்கை

Style - ஒயில்

Sunshade - வெப்பத் தடுப்பி

Subtle distinction - நுண்ணிழை வேறுபாடு

Suggestion - புத்தெண்ணம்

Sump - தொட்டிக் கிணறு

Suspense - ஆவல் தவிப்பு

Tamil Lexicon - தமிழ்ப் பேரகராதி

Tape recorder - நாடாப் பதிவி

Tepoy - தணிவு மேசை

Television terms - தொலைக்காட்சிக் கலைச்சொற்கள்

Teller - விரைவுக் காசாளர்

Temptation - அவா ஈர்ப்பு



அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் சேடபட்டி திரு. இரா. முத்தையா அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வாரியத் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர், சென்னை, காமராசர் சாலையில் அமைந்துள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள் (2.10.94).

சென்னை – கலைவாணர் அரங்கில் நடைபெற்ற அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவில், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், அண்ணல் காந்தியடிகளின் படத்தைத் திறந்து வைத்து மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரை ஆற்றினார். மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார் (2.10.94).









நாகபபட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் மயிலாடுதுறையில், பெருந்தலைவர் காமராசர் அவர்களது 92-வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு, மு.தென்னவன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு, ச.சாவர்க்கர், இ.ஆ.ப., தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் கழகத்தலைவர் திரு, ஓ.எஸ்.மணியன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடன் உள்ளனர் (4.10.1994).

## படமும் செய்தியும்

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா, கோவையில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு, மு. தென்னவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது; மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் பேரறிஞர் அண்ணா திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சி.வி.சங்கர், இ.ஆ.ப., தேசிய சிறுசேமிப்பு துணைத்தலைவர் திரு வி.பி.சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே.பி.ராஜு, திரு சிங்கை கோவிந்தராஜ், திரு கே.செல்வராஜ், டாக்டர் சீனியம்மாள், செல்வி எல்.சுலோச்சனா ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர் (8.10.94).





சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற வன உயிரின வார நிறைவு விழாவில், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு, தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி திரு,இரா. முத்தையா அவர்கள் பரிசுகள் வழங்கினார். மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு, கு. லாரன்ஸ், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு, நாகூர் மீரான் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர் (9.10.94).

சென்னையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் நிகழ்ச்சிகள் நடத்திய கலைஞர்களுக்கு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு, எஸ். கண்ணப்பன் அவர்கள் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார் (8.10.94).



## பூபாளத்திற்கொரு புல்லாங்குழல்

ஆசிரியர்: வெ. இறையன்பு

கிடைக்குமிடம்:

திரு. செல்வராஜ்
வள்ளலார் குருகுலம்
வடலூர்
(தெ.ஆ. வள்ளலார் மாவட்டம்)

சிந்தனையின் சிதறல்களே புதுக் கவிதை எனலாம். அந்த வகையில் இந்த நூலில் சிந்தனைகள் இழைந் தோடும் சீர்மிகு கவிதைகள் பல உள்ளன. 'நிறவெறிக்குக் கறுப்புக் கொடி' ஒரு அற்புதமான கவிதை. காகத்தைப் பற்றி இவர் பாடுகை யில்,

அகத்தியன் கமண்டலத்தை
அன்றுநீ
கவிழ்த்திருக்காவிட்டால்
காவிரி ஏது? கல்லணை ஏது?

கவிழ்த்ததே கவிழ்த்தாயே
தமிழ் எல்லையில்
கவிழ்த்திருக்கக்கூடாதா!
எனச் சிலர் கவலைப்படு கிறார்கள்

- என்கிற வரிகள் நல்ல சிந்தனை.

'மரணம் தந்த ஜனனம்' எனும் கவிதையில்,

'ஒரு மூங்கிலின்
மரணத்தில்
கண் திறந்தது
ஒரு புல்லாங்குழல்'

- என்கிற வரியும்,

'அகலாத அழுக்குகள்' எனும் கவிதையில்,

'குளத்தின்
அழுக்குகளை அகற்ற
மீன்களை வளர்த்தனர்,
இப்போது
மீன்களின் கழிவுகள்
மட்டுமே
அழுக்காய்
எஞ்சியிருந்தது'

என்கிற வரியும் நம்மை ஈர்க் கின்றன. இதேபோல காதல், வாழ்க்கை குறித்த பல கவிதைகள் இன்றையச் சூழலைப் படம் பிடித்துக்காட்டுகின்றன. தொடக் கம் முதல் முடிவு வரை உள்ள அத்தனைக் கவிதைகளுமே தித் திக்கும் தேன் குடங்கள்.

## சத்திய சோதனை தரும் நித்தியப் பாடங்கள்

ஆசிரியர்: புயல் சிங்காரவேலு

வெளியீடு: ராஜகுமாரி
பப்ளிகேஷன்ஸ்
20, நியூசெஞ்சுரி காலனி,
சென்னை 600 058

விலை:ரூ 16 பக்:112

சத்தியம், அகிம்சை, சகிப்புத் தன்மை ஆகிய இப்பெரும் தன்மை களைக் காந்தியடிகள் கண்ணும் கருத்துமாய்க் கடைப் பிடித்து வந்தார். 'என் வாழ்வே எனது




செய்தி' என்று கூறிய காந்தியடிகள் தமது "சத்திய சோதனை" தம் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனை களையும், சாதனைகளையும் கோடிட்டுக் காட்டுகிறார். அவரது வாழ்க்கை ஏட்டின் சில பக்கங்களைத் தொகுத்துத் தந் துள்ளார் நூலாசிரியர். அனை வரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

—பி.வி.கிரி

இசை எனக்கு அமைதி யளிக்கிறது. ஏதாவதொன்றைப் பற்றி நான் பரபரப்படைந் திருக்கும் சமயத்தில், இன்னிசை யானது உடனே எனது உள்ளத்திற்கு அமைதி தந்தது உண்டு; கோபத்தை வெல்வதற்கு இசை எனக்குப் பேருதவி தருகிறது.

— அண்ணல் காந்தியடிகள்

## ஏணிப்படிகள்

ஆசிரியர்: "அழகுதாசன்"

வெளியீடு: ருக்மணி பதிப்பகம்
3, உச்சக் கோனார்
தெரு,
இடையர் பாளையம்,
குனியமுத்தூர் (அஞ்சல்)
கோவை 641008

பக்கங்கள்: 104 விலை: ரூ.15/

சர்வோதயக் கவிஞரின் காந்திய சிந்தனைக் கவிதைகள். மனித நேயம் என்னும் மாண்பினை வளர்க்க வேண்டும்; மானிடம் செழித்துச் சமுதாயம் சிறக்க வேண்டும் என்னும் ஆர்வத்தில் சிந்தித்து எழுதப்பட்ட கவிதைகள்.

இளைய சமுதாயம் எழுந்து நிற்க ஊன்றுகோலாக இருப்பவையும், உச்சத்திற்கு ஏற ஏணிப்படிகளாக இருப்பவையும் சமுதாயப் பண்புகள் என்று கூறும் அழுகுதாசனின் கவிதைகளை மாந்தி மகிழலாம்.

## புதுவைச் சிவம் கவிதைகள்

ஆசிரியர்: கவிஞர் புதுவைச் சிவம்

வெளியீடு: முல்லைப் பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு
சென்னை 600 040

பக்கங்கள்: 104 விலை: ரூ.14/

திராவிட இயக்கத்தின் பழைய இதழ்களான திராவிட நாடு, நகர தூதன், விடுதலை, குடிஅரசு ஆகிய ஏடுகளில் கவிஞர் புதுவைச்சிவம் எழுதியிருந்த கவிதைகள் தொகுக் கப்பட்டு நூலாக வெளியிடப் பட்டுள்ளது. இந்தி எதிர்ப்பு, மூட நம்பிக்கை ஒழிப்பு, தமிழரின் தன்மான உணர்வு, தமிழர் வீரம், சுயமரியாதை, பெண்விடுதலை இவை பற்றி எழுச்சியுடன் பாடப் பட்ட கவிதைகள்.

—சாரதி



# தமிழக அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படி!

## மாண்புமிகு முதல்வர் ஆணை

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழக அரசு அலுவலர்களுக்கு 1.7.94 முதல் மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக அக விலைப்படி வழங்க ஆணையிட்டு உள்ளார். அதன்படி மாதம் ரூ.3,500 வரை ஊதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 104 சதவிகிதம் என்பதை 114 சதவிகிதம் எனவும், மாதம் ரூ.3,500-க்கு மேல் ஊதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 78 சதவிகிதம் என்பதை 85 சதவிகிதம் எனவும் அகவிலைப்படி வழங்கப்படும். இதனால் குறைந்தபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ.75 ஆகவும், அதிகபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ.399 ஆகவும் இருக்கும்.

இந்த அகவிலைப்படி உயர்வு ஊதிய நிரலில் சம்பளம் பெறும் அனைத்து அரசு அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும். இத னால் சுமார் 10 பத்து இலட்சம் அலுவலர்கள் பயன் பெறுவார்கள்.

இந்த அகவிலைப்படி உயர்வு ஜூலை 1994 முதல் ரொக்கமாக வழங்கப்படும். மேலும், கிராம உதவியாளர்களுக்குத் தற்பொழுது வழங்கப்படும் 12 சதவிகித அகவிலைப்படியை 22 சதவிகிதம் என உயர்த்தி வழங்கப்படும். இதனால் மாதத்திற்கு ரூ.75 கூடுதல் பணப் பயன் இவர்களுக்குக் கிடைக்கும். 31,000 கிராம உதவியாளர்கள் பயனடைவார்கள்.

அரசு அலுவலர்களின் அகவிலைப்படியை உயர்த்தி வழங்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்களுக்கு 1.7..94 முதல் கீழ்க்கண்டவாறு ஊதிய உயர்வு வழங்கப்படும்:

1. மாதம் ரூ.150-க்கு குறைவாக மதிப்பூதியம்/தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு .. மாதம் ரூ.10.

2. மாதம் ரூ.150-ம் அதற்கு மேலும் மதிப்பூதியம்/தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு .. மாதம் ரூ.20.

இந்த உயர்வு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் பணிபுரியும் அலுவலர்கள் உள்ளிட்ட மதிப்பூதியம் மற்றும் தொகுப்பூதியம் பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்படும். இதனால் சுமார் 3 இலட்சம் அலுவலர்கள் பயனடைவார்கள்.

அதேபோல தமிழ்நாடு மாநில அரசு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மத்திய அரசில் கொடுத்திருப்பது போல் மேலும் ஒரு அகவிலைப்படித் தவணையை 1.7.94 முதல் வழங்கப்படும். அதற்கிணங்க அகவிலைப்படி ஓய்வூதியம் ரூ.1,750 வரை பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 104 சதவிகிதம் என்பதை 114 சதவிகிதம் எனவும் ரூ.1,750க்கு மேல் ரூ.3,000 வரை பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 78 சதவிகிதம் என்பதை 85 சதவிகிதம் எனவும் ரூ.3,000-க்கு மேல் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 67 சதவிகிதம் என்பதை 74 சதவிகிதம் எனவும் அகவிலைப் படி அளிக்கப்படும். இதனால் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மாதத்திற்குக் குறைந்தபட்சம் ரூ.38-ம் அதிகப்பட்சம் ரூ.273-ம் பணப் பயன் அடைவார்கள்.

மேற்குறிப்பிட்ட திருத்திய அகவிலைப்படி தமிழ்நாடு மாநில ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் உள்ளாட்சி மற்றும் மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் இறந்துவிட்ட உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய/ ஓய்வூதியம் இல்லாத பணியாள ரமைப்பைச் சேர்ந்த மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களின் குடும்பங்கள் (மாதம் ரூ.150 கருணைத் தொகைப் பெறு பவர்கள்)உட்பட எல்லோருக்கும் வழங்கப்படும். இதனால் ஏறக்குறைய 2.67 இலட்சம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் நன்மை அடைவார்கள்.

மேற்குறிப்பிட்ட சலுகைகளினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு மொத்தமாக ரூ.171.51 கோடி செலவாகும். நடப்பாண்டில் இச்செலவினம் ரூ.114.34 கோடியாக இருக்கும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
HTA 7556.95

Licence No.TN/MS(C)/PP-23




